
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2023 நவம்பர் 18 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 91 இல. 274 | Saturday 18, November, 2023 | 10 பக்கங்கள் | 50/-

## 08 இலட்சம் மாணவருக்கு பாதணிக்கான வவுச்சர்
### அடுத்த மாதம் வழங்க அரசு திட்டம்

லோரன்ஸ் செல்வநாயகம்



பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் 8 இலட்சம் மாணவர்களுக்கு பாதணிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் 06



மாலைதீவுக் குடியரசின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் கலாநிதி மொஹமட் முய்ஸுவின் பதவியேற்பு விழாவில் நேற்று கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதவியேற்பு நிகழ்வின் பின்னர் அவருக்கு வாழ்த்து தெரிவித்த போது பிடிக்கப்பட்ட படம்.

## பாராளுமன்றினால் மட்டுமே மத்திய வங்கியை கேள்விக்குட்படுத்தலாம்
### வேறு எந்த தரப்புக்கும் அந்த அதிகாரம் இல்லை

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்றம் தவிர்ந்த ஏனைய தரப்புகளால் மத்திய வங்கியை கேள்விக்குள்ளாக்க முடியாதென, ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். 06

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு, வெட்டுப்புள்ளி
### நேற்று வெளியானது; மீள் திருத்தம் குறித்தும் அறிவிப்பு

2023ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றிரவு (17) வெளியிடப்பட்டன. இதனைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் அதற்கான மாவட்ட மட்ட வெட்டுப்புள்ளிகளை இலங்கை பரீட்சைகள் திணைக்களம் 06

## நவீனமயப்படுத்தப்பட்ட ANCL Digital Media



லேக் ஹவுஸ் நிறுவனத்தின் டிஜிட்டல் பிரிவை நவீனமயப்படுத்தி புதிய இடத்துக்கு மாற்றும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வில் லேக் ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம். நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் நிறைவேற்றுதர அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (படம்: ருக்மல் கமகே)

# ‘கோப்’ குழுவின் அமர்வுகள் மறு அறிவித்தல்வரை நிறுத்தம்
## சபாநாயகர் மஹிந்த யாப்பா சபையில் அறிவிப்பு
### கோப் குழுவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் மீண்டும் அமர்வை நடத்துவதாக அறிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவின் (கோப் குழு) அமர்வுகள் மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டுள்ளதாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றையதினம் விடயமொன்றை சபையில் முன்வைத்தபோது, அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சபாநாயகர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அது தொடர்பில் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கோப் குழுவின் அமர்வு நேற்றையதினம் (17) மதியம் ஒரு மணிக்கு நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை 06

## மஹிந்த ராஜபக்ஷவுக்கு இன்று அகவை 78
### சர்வதேச இந்துமத குருபீடம் ஆசி



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 78ஆவது பிறந்ததினம் இன்று (18) ஆகும். அவரது பிறந்ததினத்தையிட்டு சர்வதேச இந்துமதபீடம் சார்பாக சிவநெறி காவலர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஆசி வழங்கி, வாழ்த்துத் தெரிவித்தார். 06

19 வயதுக்கு கீழான உலகக் கிண்ண போட்டி;
## இலங்கை அணிக்கு பெற்று கொள்வதை உறுதிப்படுத்தவும்
### ஆளும், எதிரணிகளை ஒன்றுபட கஞ்சன கோரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



கிரிக்கெட் தொடர்பாக தற்போதைய நெருக்கடியான நிலையில், ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து 19 வயதின் கீழ் உலகக் கிண்ண போட்டியை பெற்றுக்கொள்வதை 06

தொழில்நுட்ப வளர்ச்சியை நோக்கி உலகம்;
## பாடசாலை கல்வியை டிஜிட்டல் மயமாக்க அரசு எதிர்பார்ப்பு
### கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



உலகம் தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னோக்கிச் செல்லும் வகையில் பாடசாலைக் கல்வியை டிஜிட்டல் மயமாக்க எதிர்பார்த்துள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 06

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை
## யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி 196 புள்ளிகள் பெற்று சாதனை
### 110 மாணவிகளில் 35 பேர் சித்தி

யாழ். விசேட நிருபர்



2023ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவான புள்ளிகளை பெற்று யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஜெராட் அமல்ராஜ் வனிஷ்கா சாதனை படைத்துள்ளார். 06

IMF இலங்கைக்கு விதிக்க நிர்ணயிக்கப்பட்ட
## வருமான இலக்குகளை அடைவதில் நாடு தொடர்ந்தும் பின்னிலையில்!
### மேலும் இறுக்கமான கொள்கைகள் அவசியம் நிதியமைச்சு செயலாளர்




சர்வதேச நாணய நிதியத்தால் நிர்ணயிக்கப்பட்ட வருமான இலக்குகளை அடைவதில் இலங்கை தொடர்ந்தும் பின்னிலையில் இருப்பதாக, திறைசேரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார். 06

குறுகிய அரசியல் நோக்கம் கொண்ட
## எதிர்க்கட்சிகள் சில பட்ஜட் குறித்து போலிப் பிரசாரம்
### மக்கள் நம்பக்கூடாது என்கிறார் அகிலவிராஜ்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் நாட்டுக்கு மிகவும் சிறந்ததாகும். ஆயினும், சிலர் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காகவும் இந்த பட்ஜட் தொடர்பாக 06

நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமெனில்
## ஊழல் மோசடிகளை அரசு தடுத்து நிறுத்த வேண்டும்
### பாராளுமன்றில் மு.கா. தலைவர் ஹக்கீம் உரை



நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை தடுத்து நிறுத்துவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், வீழ்ச்சி அடைந்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாதென, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் ஆண்டுக்கான வரவு 06

## இலங்கைக்கு வருகை தரவுள்ள மற்றுமொரு சீனக் கப்பல்
### அரசாங்கத்திடம் அனுமதி கோரி விண்ணப்பம்



சீனாவின் சியாங் யாங் கொங் 03 எனும் ஆய்வுக் கப்பல், இலங்கைக்கு வருகை தந்து, ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கத்திடம் சீன அதிகாரிகள் 06

நாட்டுக்கு வந்ததும் வாக்குமூலம் வழங்க வேண்டும்;
## போதகர் ஜெரோமை கைதுசெய்ய வேண்டாம்
### CIDக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது



போதகர் ஜெரோம் பெர்னாண்டோ வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு திரும்பும் போது, விமான நிலையத்தில் அவரைக் கைது செய்ய வேண்டாமென்று குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. 06


புலம்பெயர்ந்தோர் முதலீடு தேவையா?
## மாகாணசபைக்கு முழு அதிகாரமும் வேண்டும்
### சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

பருத்தித்துறை விசேட நிருபர்



புலம்பெயர் தமிழர்களின் முதலீடு தேவையெனில், மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை முழுமையாக வழங்குவதற்கு ஜனாதிபதி முன்வர வேண்டும். 06

ஒரு தலைக் காதலால் வந்த விவகாரம்;
## ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் கொடூரக் கொலை
### இந்தியாவில் விமான நிலைய ஊழியர் கைது!



ஒரு தலைக் காதல் விவகாரத்தால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் இந்தியாவின் கர்நாடகம் மாநிலத்தில் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவம் தொடர்பாக 06

### நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு

# பொருளாதாரத்தை நிலைப்படுத்திய பின்னரே பொருளாதார மறுசீரமைப்பு




இலங்கையின் பொருளாதார நெருக்கடியை ஒரேயொரு வரவு செலவு திட்டத்தினால் தீர்த்துவிட முடியாதெனவும், அதற்கு தீர்வு காணும் வகையில் பாதையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதோடு, நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்து



வதற்கான வேலைத்திட்டத்தை செயற்படுத்திய பின்னர் பொருளாதார மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளும் பட்சத்தில் வலுவான பொருளாதாரமொன்றை கட்டியெழுப்ப முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சங்ரீலா ஹோட்டலில் (15) கொழும்பு பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ பட்டப்பின்படிப்புப் பட்டதாரிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாற்றம் காணும் சூழலுக்கு ஏற்ப மாறுபடுவதன் ஊடாக சாத்தியமான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அந்த முறைமை மிகவும் அவசியமானது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதிய சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கிலேயே அஸ்வெசும நலன்புரித் திட்ட கொடுப்பனவுகள் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சூழலை உருவாக்கும் வகையில், இம்முறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது காசா எல்லை பகுதியில் நடைபெற்று வரும் மோதல்கள் இலங்கை உள்ளிட்ட உலக நாடுகளை பாதிக்கக் கூடும் என்பதால் வரவு செலவு திட்டத்தின் சாதக தன்மைகள் மாறக் கூடும்.

அதனாலேயே உலக பலவான்களுடன் இணைந்து காசா எல்லை பகுதியில் நடைபெறும் மோதல்களை தடுக்க முற்படுவதாகவும், மத்திய கிழக்கின் செயற்பாடுகள் இலங்கையில் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக பொருளாதாரத்தை மீண்டும் நிலைப்படுத்த வேண்டியது அவசியம் என்றும், அதன் பின்னரே பொருளாதாரத்தை மறுசீரமைக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார். நான் முன்வைத்த முதலாவது வரவு செலவு திட்டத்தில் பொருளாதார நிலைப்படுத்தலுக்கான யோசனைகளை முன்வைத்திருந்தேன், தற்போதைய வரவு செலவு திட்டத்தில் பொருளாதார மறுசீரமைப்புக்கான யோசனைகளை முன்வைத்துள்ளேன். ஒரேயொரு வரவு செலவு திட்டத்தினைக் கொண்டு நாட்டின் அனைத்துப் பொருளாதார பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிட முடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேர்தலை இலக்கு வைத்தே இம்முறை வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டிருப்பதாக பலரும் கூறுகின்றனர். அது உண்மையல்ல. இம்முறை வரவு செலவுத் திட்டம் புதிய பொருளாதாரத்திற்கான பிரவேசத்தை ஏற்படுத்தல், அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, அஸ்வெசும கொடுப்பனவுகளை அதிகரித்தல், சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சிகளை வலுவூட்டல் உட்பட அனைத்துத் துறைகளையும் உள்வாங்கியதாக அமைந்துள்ளது. சிறந்த அரச சேவைக்கு சம்பள அதிகரிப்பு அவசியமாகும். புதிய சமூகத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையாக வரவு செலவுத் திட்டத்தில் அஸ்வெசும கொடுப்பனவுகளை மூன்று மடங்காக அதிகரித்துள்ளோம்.

இலங்கையின் மிகப்பெரிய தனியார் மயப்படுத்தலை இந்த வரவு செலவுத் திட்டம் பரிந்துரைத்துள்ளது. இரண்டு மில்லியன் அளவிலானோரை காணி உரிமையாளர்களாக மாற்றியுள்ளது.

அதேபோல் பசுமை வலுசக்தி தொடர்பில் அவதானம் செலுத்தியிருப்பதால், இலங்கையின் பசுமைப் பொருளாதாரத் துறையை முன்னேற்றம் அடையச் செய்வதற்கான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

அதேபோல் உலர் வலயத்தில் விவசாயத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் மீன்பிடித்துறையை விரிவுபடுத்தல் திட்டங்களுடன், சுற்றுலாத்துறையில் காணப்படும் பிரச்சினைகளை அறிந்துகொண்டு சுற்றுலா பயணிகள் வருகையை 05 மில்லியனாக அதிகரிப்பதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி போட்டித் தன்மையை ஏற்றுக்கொண்டு, இந்தியா மற்றும் பிராந்தியத்தின் விரிவான பொருளாதார கூட்டமைப்பு (RCEP), தென்கிழக்காசிய நாடுகளின் சங்கம் (ASEAN), ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆகியவற்றுடன் தொடர்புகளை பலப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பங்களாதேஷ் போன்ற வளர்ந்துவரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளுடன் போட்டியிடுவதற்கு காணப்படும் சவால்களை அறிந்துகொண்டு, எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, அதற்கு அவசியமான சூழலையும் தற்போதைய வரவு செலவுத் திட்டம் உருவாக்கியுள்ளது. அதேபோல் பொருளாதார மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க தகுந்த வகையில் கல்வித் திட்டத்திலும் மாற்றம் செய்ய வேண்டும்.

இதன்போது, தனியார் துறைக்காக புதிய தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவ முன்மொழியப்பட்டுள்ளது. இந்தியாவின் சென்னையில் உள்ள ஐஐடி (IIT) பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலின் கீழ் கண்டி நகரில் ஒரு புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை நிறுவ முன்மொழியப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்துக்கான புதிய பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, திருகோணமலையின் பிரதான துறைமுகம் மற்றும் மேலும் சாத்தியமான அபிவிருத்தி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி இலங்கையை ஒரு அபிவிருத்தி மையமாக முன்னேற்றுவதன் மூலம் பிராந்திய சேவைகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய எதிர்பார்த்துள்ளோம். 2030,2035 காலப் பகுதிக்குள் நவீன பொருளாதார இலக்குகளை அடைவதற்கு தேவையான பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்வதை இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.

வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை செயல்படுத்துவதில் உள்ள சவால்களை வெற்றி கொள்ளவும், பொருளாதார முன்னேற்றத்திற்காக நாட்டை கட்டியெழுப்பவும் தனியார் துறை, வெளிநாட்டு உதவி மற்றும் ஓய்வுபெற்ற தொழில் வல்லுநர்கள் ஆகியோருடனான ஒத்துழைப்பை ஊக்குவிக்க வேண்டும். அத்தகைய அர்ப்பணிப்பு இல்லாமல், அரசாங்கம் மாத்திரம் செய்யக்கூடிய பணிகள் குறைவாகவே உள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.



### 2030 இல் அனைத்து பாடசாலைகளிலும்

# 'அனைவருக்கும் ஆங்கிலம்' கல்வித் திட்டம் அமுலாகும்

மொழி அறிவை தமிழ், சிங்கள மொழிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது, ஏனைய மொழி அறிவையும் மாணவத் தலைமுறைக்கு வழங்க வேண்டும் என்பதால் 2030 ஆம் ஆண்டாகும்போது அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆங்கில அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (16) நடைபெற்ற, டீ.எஸ் சேனநாயக்க கல்லூரியின் ஸ்தாபகரும் தலைசிறந்த கல்வியலாளருமான மறைந்த ஆர்.ஐ.டி அலஸின் 10 ஆவது நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ஆர்.ஐ.டி அலஸின் 10 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு "மகே மங்பெத" என்ற சுயசரிதை நூலும் வெளியிடப்பட்டது.

அதிபர்கள் ஆயிரம் பேருக்கு மேற்படி நூலை வழங்குவதற்கான ஆரம்பகட்டமாக 10 பேருக்கு நூல்கள் வழங்கப்பட்டன.

இந்நாட்டின் கல்வித் திட்டத்தை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, "அனைவருக்கும் கல்வி" என்பதே ஆர்.ஐ.டி அலஸின் நோக்கமாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

**நாட்டின் மீது அக்கறை இருக்குமாயின் மாணவர்களின் எதிர்காலத்துக்காக புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க முன்வருமாறு புலம்பெயர் தமிழ், சிங்களவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு**

பணம் இல்லை என்ற காரணத்தால் எந்தவொரு பிள்ளைக்கும் உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போய்விடக்கூடாதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சொத்துக்களை விற்று பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்நாட்டு பிள்ளைகளின் உயர் கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய பல்கலைக்கழங்களை ஆரம்பிக்கவிருப்பதாகவும், அதற்கு பங்களிப்பு வழங்கும் தனியார் துறையினருக்கு குறைவின்றி ஆதரவு வழங்க எதிர்பார்ப்பதாகவும் உறுதியளித்தார்.

நாட்டின் மீது அக்கறை இருக்குமாயின் இந்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்திற்காக புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க புலம்பெயர் தமிழ், சிங்கள இலங்கையருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

''பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை பெற்றுக்கொடுப்பதே அனைத்து பெற்றோரின் எதிர்பார்ப்பாகும். கல்வியை தமிழ், சிங்கள மொழிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் ஜப்பான், சீனா, அரபு, கொரிய மொழிகளையும் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.

2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதோடு, அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆங்கில அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டமும் தயாரிக்கப்படும்.

இந்நாட்டின் உயர்கல்வி தொடர்பில் சிறப்பு கவனம் செலுத்துகிறோம். இந்நாட்டின் இலவசக் கல்வி இருப்பதாக கூறினாலும் பெருமளவானோர் உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். உலகின் பல்வேறு நாடுகளில் இந்நாட்டு பிள்ளைகள் உயர்கல்வி பயில்கிறார்கள். அந்த நாடுகளில் காணப்படும் கல்வி முறைமைகளை நமது நாட்டிலும் செயற்படுத்து



வோம். பல்கலைக்கழங்களுக்கு செலுத்த அவசியமான பணத்தை பல்கலைக்கழகங்களுக்கு வழங்குவதே இலவச உயர்கல்வியாகும் என பலரும் கூறுகிறார்கள். இருப்பினும் மற்றைய நாடுகளில் அந்த முறையில் உயர்கல்வி வழங்கப்படுவதில்லை.

கல்விச் செயற்பாடுகளை தொடர மாணவர்களுக்கு சலுகை கடன் வழங்கப்படுகிறது. அதனால் விரும்பிய பல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பு மாணவருக்கு கிடைக்கிறது. எமது நாட்டில் அந்தத் தெரிவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே செய்கிறது. அதனால் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதேபோல் பணம் இல்லாதன் காரணத்தால் எந்தவொரு மாணவருக்கும் உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போகக் கூடாது.

இந்நாட்டில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். தற்போதுள்ள பல்கலைக்கழகங்களின் தரத்தையும் மேம்படுத்த வேண்டும்.

பல்கலைக்கழகங்களுக்கு அவசியமான வசதிகளை வழங்கி அதன் பலன்களை 05 வருடங்களில் அடைய வேண்டும். அதன் போது மாணவர்களுக்கு சிறந்த கல்வி கிடைக்கும். அதேபோல் ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்திற்கு இணையான 03 தொழில்நுட்ப பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவும் எதிர்பார்க்கிறோம்.

அதேபோல் அரச சார்பற்ற நிறுவனங்களை ஆரம்பிக்கவும் நாம் அனுமதி வழங்குவோம். தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில மாணவர்களுக்கு சலுகைக் கடன்கள் வழங்கப்படும். எனவே காணிகளை விற்பனை செய்துவிட்டு வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் இருக்காது. நாட்டின் பல்கலைக்கழகங்கள் அதிகரிக்கும் பட்சத்தில் வெளிநாட்டு மாணவர்களின் வருகையும் அதிகரிக்கும்.'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 நவம்பர் 18 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்


தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 11.57
அஸர் - 03.19
மஃரிப் - 05.50
இஷா - 07.03

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் கார்த்திகை 02
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் பிறந்தநாள் நிகழ்வு கம்பஹாவில்



ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 78ஆவது பிறந்ததினத்தையிட்டு 420 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மதிய உணவும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான சுகாதாரப் பொருட்கள் அடங்கிய பொதிகளும் வழங்கும் நிகழ்வு நேற்று (17) கம்பஹா மாவட்டச் செயலகத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது.

ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் கம்பஹா மாவட்ட இலங்கை பொதுஜன முன்னணி அமைச்சர்கள் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

இங்கு கம்பஹா மாவட்டத்தின் அனைத்து தேர்தல் தொகுதிகளிலுமுள்ள குறைந்த வருமானம் பெறும் 420 கர்ப்பிணித் தாய்மாருக்குத் தேவையான சுகாதாரப் பொருட்களும், 5,000 ரூபா நிதியுதவியும், போஷாக்கான மதிய உணவும் வழங்கப்பட்டன.

அங்கு வந்திருந்த மஹா சங்கரத்ன தேரர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் கலந்து கொண்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் ஆசீர்வாதம் வழங்கினர்.

### 2024 வரவு – செலவு திட்டத்தினூடாக

# பெப்ரவரி, மார்ச் மாதமளவில் பொருட்களின் விலையை குறைப்பதே ஜனாதிபதியின் நோக்கம்

### பொது நிர்வாக இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த



சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினூடாக அடுத்த வருடத்தின் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் பொருட்களின் விலையை குறைக்க வேண்டுமென்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகுமென, பொது நிர்வாக இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் பொருட்களின் விலைகளை குறைப்பதனூடாக நாட்டு மக்களுக்கு சுமூகமான சூழலொன்றை உருவாக்குவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமெனவும், இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பினால் மாத்திரம் அதற்கு தீர்வு காண முடியாதெனவும், அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில் சுமூகமான நிலைமை உருவாகுமென எதிர்பார்ப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்,

"மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் புதிய வருமான வழிமுறைகளை உருவாக்கக்கூடியதுமான வரவு செலவுத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. அது தொடர்பான பல்வேறு விமர்சனங்களும் எழுந்துள்ளன.

குறிப்பாக பிரதமரின் கீழுள்ள பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்க ஊழியர்களுக்கான 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், சம்பள அதிகரிப்பினால் மாத்திரம் பிரச்சினைகளை தீர்த்துவிட முடியாது. கொவிட்19 பரவல் காலத்திலிருந்து அரச ஊழியர்களுக்கு சிறிதளவும் சம்பள அதிகரிப்பு கிடைக்கவில்லை என்பதாலேயே தற்போது சம்பள அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு கல்வி திட்டத்தை விஸ்தரிக்கும் நோக்கில் 4 புதிய பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு, தடைப்பட்டு கிடக்கும் வீதி நிர்மாண பணிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான விடயங்களை மறைத்துவிட்டு எதிர்கட்சி தலைவர் உள்ளிட்ட தரப்பினரால் கிரிக்கெட் தொடர்பிலான விடயங்கள் குறித்த கலந்துரையாடல்கள் ஏற்படுத்தப்படுகின்றமை கவலைக்குரியது. இருப்பினும், அரசாங்க தரப்பினர் அந்த தவறுகளை செய்யவில்லை.

அதேபோல், அரசாங்கத்தின் வரி வருமானம் பெப்ரவரி மாதத்திலேயே சேகரிக்கப்படும் என்பதாலேயே பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களின் அரச வருமானத்தை கொண்டு ஏப்ரல் மாத்திலிருந்து அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக நாட்டின் ஏனைய மக்களுக்கும் நிவாரணம் கிடைக்க வேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டியது அவசியமாகும். குறிப்பாக அரசாங்கம் வழங்கும் சலுகைகளை வியாபாரச் சமூகம் மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும்" என்றார்.



நவீனமயப்படுத்திய லேக் ஹவுஸ் நிறுவனத்தின் டிஜிட்டல் பிரிவை புதிய இடத்துக்கு மாற்றும் நிகழ்வு நேற்று (17) நடைபெற்றது. நிறுவனத்தின் சட்டம் மற்றும் நிர்வாக பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க, இப்பிரிவை உத்தியோகபூர்வமாக ஊழியர்களிடம் கையளிக்கும் வகையில் நாடா வெட்டி திறந்து வைப்பதையும், பிரிவின் பிரதானிகளால் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் வரவேற்கப்படுவதையும், நிகழ்வில் பங்குபற்றிய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் மங்கள விளக்கேற்றுவதையும் காணலாம். (படங்கள் : ருக்மல் கமகே)

### அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்;

# பாலியல் கல்விக்கான புதிய பாடத்திட்டம் விரைவில்!

### உள்ளடக்க அரசு பரிசீலித்து வருகிறது

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், இதனைத் தடுக்கும் வகையில் குறிப்பிடத்தக்கதொரு நடவடிக்கையாக பாடசாலைகளில் பாலியல் கல்விக்கான புதிய பாடத்திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் பரிசீலித்து வருவதாக, பாராளுமன்றத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் சிறுவர்களுக்கான பாராளுமன்றக் குழுவில் நடைபெற்றதாகவும், அவர் தெரிவித்தார்.

பாலர் பாடசாலை முதல் வெவ்வேறு வயதுடையோருக்கான பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இது சிறுவர்களுக்கு சரியான அறிவு மற்றும் முக்கியமான தலைப்புகள் தொடர்பான புரிதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும், அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, விரிவான பாலியல் கல்வியின் அவசரத் தேவையை எடுத்துரைத்த பாராளுமன்ற சிறுவர் பேரவைத் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன, இந்தப் பிரதேசத்தில் சரியான கல்வி இன்மையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் வலியுறுத்தினார். புதிய பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் சிறுவர்களுக்கு அவர்களின் சொந்த பாலியல் ஆரோக்கியம் மற்றும் விழிப்புணர்வை வழங்குவதற்கு அதிகாரிகள் நம்புகின்றனர்.

புதிய பாலினக் கல்வி பாடத்திட்டத்தின் அறிமுகம் சிறுவர்களை பாதுகாப்பதிலும் அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதிலும் ஒரு கூட்டு அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது. சிறுவர் பாதுகாப்புக்கு இலங்கை தொடர்ந்து முன்னுரிமை அளித்து வரும் நிலையில், இந்த முயற்சிகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான அழுத்தமான பிரச்சினையை கையாள்வதில் குறிப்பிடத்தக்க முன்னோக்கை குறிக்கின்றன.

# மலையகம் - 200 சிறப்பு நிகழ்வு லண்டனில் இன்று



இலங்கைக்கு மலையக மக்கள் வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதையிட்டு லண்டனில் இன்று (18) அந்நாட்டு நேரப்படி பி.ப. 2.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை பல்வேறு நிகழ்வுகள் நடைபெறும்.

பிரித்தானியவை தலைமையகமாகக் கொண்டியங்கும் 'Solidarity for Malayagam' அமைப்பு மற்றும் பிரிட்டிஷ் மலையக மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வெம்பிளியில் SUDBURY METHODIST CHURCH HALL மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறும்.

சிறப்பு மாநாடு, ஆய்வரங்கம், ஓவியக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகளும், சமூக ஒன்றுகூடலும், 'கறுப்பு வாரம்' என்ற தொனிபொருளில் கருத்தரங்கமும் இராப்போஷனமும் இதன்போது நடைபெறும்.

இலங்கையிலிருந்து மும்மொழிகளினதும் இலக்கியப் பேச்சாளர் எழுத்தாளர் என்ற ரீதியில் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், லண்டன் குரொய்டன் நகரத்தின் துணை மேயர் அ.தாமோதரன், பாரிஸ்டர் பத்ரிநாத் பாலவெங்கடேசன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர். The Life Of Upcountry Tamils Of Plantation In Sri Lanka 200 Years என்ற ஓவியக் கண்காட்சியில் வைக்கப்படும் படைப்புகளின் ஏலம் மூலமாக கிடைக்கப் பெறும் நிதி, மாணவர்களின் உயர் கல்விக்கான புலமை நிதியத்துக்கு வழங்கப்படவுள்ளதாக, நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

### புலமைப்பரிசில் பரீட்சையில்

# சைவமங்கையர் வித்தியாலய மாணவிகள் 62 பேர் சித்தி

2023ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சைவ மங்கையர் வித்தியாலயத்தைச் சேர்ந்த 62 மாணவிகள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

ஆரம்பப்பிரிவு தலைமை மாணவி ராஜனா ரமேஷ் அதிகூடிய புள்ளிகளாக 187 புள்ளிகளைப் பெற்றுள்ளார். 98.36 சதவீதமான மாணவிகள் புலமைப்பரிசில் பரீட்சை சித்தி பெற்று, பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவ்வித்தியாலயத்திலிருந்து 184 மாணவிகள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

# பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவர் சங்க கூட்டம்

யாழ். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினுடைய கொழும்புக் கிளையின் 65ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் 2023 எதிர்வரும் 25ஆம் திகதி (சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு வெள்ளவத்தை Marine Drive இல் அமைந்துள்ள Global Tower விடுதியில் நடைபெறவுள்ளது.

கொழும்புக் கிளையின் நடப்பாண்டுத் தலைவர் எஸ்.பாலேந்திரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதுடன், கிளையின் உபபோஷகரும் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவருமான Dr. J.N.Chinniah இதில் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். பழைய மாணவர் சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் 0714 767489 அல்லது 077 3170791 கையடக்கத் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு, விபரங்களை அறிந்து, கூட்டத்தில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு, துணைத் தலைவர்களில் ஒருவரான செல்லத்தம்பி துரைராசா கேட்டுக்கொண்டார்.

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 3 உணவகங்களுக்கு சீல் வைப்பு

**யாழ். விசேட நிருபர்**

சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 3 உணவகங்கள் மற்றும் பேக்கரியொன்றுக்கு யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய சீல் வைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை, இராமநாதன் வீதிகளை அண்டியுள்ள உணவகங்கள், பேக்கரிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை நடத்திய போது, சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 3 உணவகங்களையும் பேக்கரியொன்றையும் அடையாளம் கண்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இவ்வழக்கு நேற்று முன்தினம் (16) விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, இவற்றுக்கு சீல் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், இந்த வழக்கை எதிர்வரும் டிசெம்பருக்கு ஒத்தி வைத்தது.

# வாசனை, மசாலா உற்பத்தி பொருட்களுக்கு தர சான்றிதழ்

### டிசம்பர் முதல் பெற்றிருப்பது கட்டாயமாகின்றது



எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் இலங்கையில் வாசனை மற்றும் மசாலா உற்பத்திப் பொருட்களுக்கு தரச் சான்றிதழ் பெற்றிருப்பது கட்டாயமாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து வாசனைப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது, மசாலாப் பொருட்கள் மற்றும் அது தொடர்பான பொருட்களை விற்பனை செய்யும் உற்பத்தியாளர்கள் தரச் சான்றிதழ் பெறுவது கட்டாயமாக்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் இலங்கையின் வாசனைப் பொருட்களுக்கு அதிக கேள்வி உள்ள போதிலும், வாசனைப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வாசனைப் பொருள் ஏற்றுமதியாளர்கள், அவற்றை ஏற்றுமதி செய்வதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது. இந்நிலையில், மசாலா பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறையினரின் வாசனைப் பொருட்களுக்கான தர உத்தரவாத திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு வாசனைப் பொருள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் சந்தைப்படுத்தல் சபைக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

இதற்கமைய மசாலா மற்றும் அதனுடன் தொடர்புடைய தயாரிப்புகளுக்கான சந்தைப்படுத்தல் சபை, சர்வதேச அங்கீகாரம் பெற்ற சிங்கப்பூரின் SGS நிறுவனத்துடன் இணைந்து முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளது.

உலகின் பல நாடுகளிலுள்ள மக்கள் மிளகு, ஏலக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை போன்ற வாசனைப் பொருட்களை பயன்படுத்தும் போதிலும், சில மோசடி வியாபாரிகள் இலங்கையின் வாசனைப் பொருட்களுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 02ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 03

### குறள் தரும் சிந்தனை

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்

படித்தும், படித்ததை உணர்ந்தும், உணர்ந்ததைப் பலருக்கு உணர்த்திடவும் கூடியவர்கள், தாங்கள் மட்டும் அவ்வாறு நடக்காமலிருந்தால் அவர்களைவிடப் பேதைகள் யாரும் இருக்க முடியாது.

## உணவுப் பொருட்களின் தரத்தில் மிகுந்த விழிப்புணர்வு அவசியம்!

உணவுப் பொருட்களின் தரம் குறித்து கூடுதலான கரிசனை செலுத்த வேண்டிய அவசியத்தில் மக்கள் இன்று உள்ளனர். உணவுப் பொருட்களில் நச்சுத்தன்மையான இரசாயனங்கள் கலந்துள்ளதாக அடிக்கடி செய்திகள் வெளிவருவதனாலேயே இது தொடர்பான அக்கறை மிகவும் அவசியமாகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் ஊடகமொன்றில் அதிர்ச்சியான செய்தியொன்று வெளியாகியிருந்தது. வெளிநாடொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் மிளகாயின் தரம் குறித்து அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த செத்தல் மிளகாயில் நச்சு இரசாயனப் பதார்த்தம் கலக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நச்சுப்பொருளானது புற்றுநோயை ஏற்படுத்தும் அபாயத்தைக் கொண்டதெனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதிர்ஷ்டவசமாக அந்த நச்சு இரசாயனம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், குறித்த செத்தல் மிளகாய் அடங்கிய கொள்கலன் உரிய நாட்டுக்கே திருப்பி அனுப்பப்பட்டதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனவே அந்த நச்சு இரசாயனம் கலந்த செத்தல் மிளகாயை உணவுக்குப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டுள்ளது.

ஆனால் இங்கு மற்றொரு அச்சம் ஏற்படுகின்றது. இது போன்ற நச்சு இரசாயனங்கள் கலந்த உணவுப் பொருட்கள் ஏற்கனவே நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்குமோ என்பதே அந்த அச்சம்! அவ்வாறு அவை நாட்டுக்குள் வந்து சேர்ந்திருக்குமானால், அதனை மக்கள் தங்களது உணவுக்காகப் பயன்படுத்தியிருப்பரோ என்பது முக்கிய அச்சமாகும்.

எவ்வாறாக இருப்பினும் இவ்வாறான நச்சு இரசாயனப் பொருட்கள் கலந்த உணவுப் பொருட்களைக் கண்டுபிடித்து, அவற்றை நாட்டுக்குள் வரவிடாமல் தடுப்பதற்குக் காரணமாகவிருந்த அதிகாரிகளைப் பாராட்டுவது இவ்விடத்தில் முக்கியமாகும். அது மாத்திரமன்றி எதிர்காலத்தில் இவ்வாறான தரமற்ற உணவுப் பொருட்கள் குறித்து அதிகாரிகள் மாத்திரமன்றி, சாதாரண பொதுமக்களும் மிகுந்த விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் தரமற்ற உணவுப் பொருட்களினால் உண்டாகின்ற பாதிப்புகளில் இருந்து மக்கள் பாதுகாப்புப் பெற முடியும்.

இன்று உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அதிகரித்துவரும் சனத்தொகைக்குப் போதுமான அளவில் உணவுப் பொருட்கள் இல்லாத காரணத்தாலும், அவற்றின் விலையேற்றம் காரணமாகவும் விஞ்ஞான உலகம் புதிய கண்டுபிடிப்புகளான கலப்பினப் பயிர்களையும், விவசாய இரசாயனங்களையும், இரசாயனப் பசளைகளையும் அறிமுகப்படுத்தி வருகின்றது.

உண்மையில் இவை விவசாய உற்பத்தியை அதிகரித்த போதிலும், இவ்விவசாய இராசாயனங்களின் அதிகரித்த பாவனையின் விளைவாக விஞ்ஞான உலகும், விவசாய உலகும் பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றன.

இந்த ஆபத்துகளில் முக்கியமானது விவசாய உற்பத்தி நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற பீடைநாசினிகளும் இரசாயனப் பசளைகளுமாகும்.

விவசாயப் பயிர்களை பீடைகளிலிருந்து பாதுகாப்பதற்காகவும், உணவு உற்பத்திப் பொருட்களை நீண்ட காலத்திற்குச் சேமித்து வைத்துப் பாதுகாப்பதற்காகவும் பயன்படுத்தப்படும் நச்சுத்தன்மையான விவசாய இரசாயனங்கள் உண்மையிலேயே மிகவும் ஆபத்தானவையாகும். அவை மனித உடலுக்குள் சென்று பலவிதமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. புற்றுநோய் போன்ற ஆபத்தான வியாதிகளையும் ஏற்படுத்துகின்றன. ஆகவே இவ்விடயம் குறித்து அலட்சியமாக இருந்துவிட முடியாது.

நாங்கள் கடைகளில் வாங்குகின்ற பழங்கள் பலவற்றிலும் உடலுக்கு ஒவ்வாத நஞ்சுப் பதார்த்தங்கள் உள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன. இப்பழங்களை பல நாட்களுக்குப் பாதுகாத்து வைப்பதற்காகவே விற்பனையாளர்கள் இக்காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்தியாவில் நடைபெற்ற ஆய்வொன்றின் பிரகாரம் மனித உடல் ஏற்றுக்கொள்ளக்கூடிய நஞ்சினை விட 40 மடங்கு நச்சுப் பதார்த்தங்கள் மனிதனது உடலுக்கு உணவினூடாக செல்கின்றதெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாம் கடைகளில் வாங்குகின்ற உணவுகள் பலவற்றில் நிறமூட்டல் மற்றும் மணமூட்டலுக்கான இரசாயனங்களும், அவற்றைப் பாதுகாப்பதற்கான இரசாயனங்களும் உள்ளன. இவை உடலில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதை மறந்துவிடலாகாது.

இவ்வாறு பல வழிகளிலும் நச்சுப்பொருட்கள் எமது உடலுக்குள் செல்வதால், உணவுப்பொருட்களின் தரம் குறித்த விழிப்புணர்வு எவ்வேளையிலும் எமக்கு அவசியமாகின்றது. எமது இளம்பராயத்தினர் இக்காலத்தில் பலவாறான உணவுகளை விரும்பி உண்கின்றனர். பிள்ளைகளின் வற்புறுத்தலுக்காக பெற்றோரும் அவ்வாறான உணவுப் பொருட்களை தங்களது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கின்றனர்.

இக்காலத்தில் உணவகங்களில் கிடைக்கின்ற உணவுப்பொருட்கள் அத்தனையுமே தரமானவையல்ல என்பதை மறந்து விடலாகாது. இளவயதினரை ஈர்ப்பதற்காக பலவகையான சுவையூட்டிகளை உணவுப்பண்டங்களில் கலக்கின்றனர். அந்த உணவுகளால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை உணவக உரிமையாளர்கள் பொருட்படுத்துவரென்று எதிர்பார்க்க முடியாது. ஆகவே மக்களே தங்களது ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# பாடகி நந்தா மாலினிக்கு சிறந்த பாடகிக்கான விருது வழங்கி, கௌரவமளித்த ஜனாதிபதி

பல ஆண்டுகளாக ஜனாதிபதி விருது வழங்கல் நிகழ்வுகளை ஒருங்கிணைப்பு செய்துள்ளேன். ஆனால் 2023 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் நிகழ்வு, எனக்கு மனநிறைவாகவும் மிகவும் மகிழ்ச்சியாகவும் என்னைப் பற்றி பெருமையாகவும் இருந்தது.

விருது வழங்கும் நாளில் காலையில் என்னை அழைத்த பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, 2020 ஆம் ஆண்டு சிறந்த பின்னணிப் பாடகியாக நந்தா மாலினி பரிந்துரைக்கப்பட்டுள்ளாரென்றும், அவர் உடல் நலக்குறைவு காரணமாக நடக்க சிரமப்படுவதாகவும், ஆனால் அவர் சிறிது நேரமாவது விழாவில் கலந்து கொள்வாரென்றும் என்னிடம் தெரிவித்தார்.

அத்துடன் என்னிடம் ஒரு கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

அவருக்கு விருது கிடைத்தால், அவர் மேடையேற சிரமப்படுவார். எனவே விருதுக்கான அறிவித்தலின்போது அவர் சிரமப்படும் விதத்தில் அறிவிக்க வேண்டாமென கேட்டுக் கொண்டார்.

அவர் சார்பில் தனது மகள் அல்லது சகோதரி யாரேனும் மேடைக்கு வந்து விருதை பெற்றுக் கொள்வார்களென்றும் கூறினார்.

பாடகர், பாகிகளுக்கான விருது வழங்கும் சந்தர்ப்பம் வந்தது. மேடையில் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார விருதுகளை வழங்கிக் கொண்டிருந்தார். 2020 இல் சிறந்த பின்னணிப் பாடகி விருது வழங்கப்படவிருந்த அறிவித்தல் அட்டையைத் திறந்து, பெயரை அறிவிக்கத் தயாராக இருந்தேன்.

நந்தா மாலினி என்ற பெயர் அங்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. பெயரை அறிவிக்கக் கூடாதென்ற எண்ணம் இருந்தது. இராஜாங்க அமைச்சரிடம் சென்றேன் "கொஞ்சம் சம்பிரதாயத்தை மாற்ற முயற்சி செய்வோமா?" என்று நான் அவரிடம் கேட்டேன்.

அதற்கு அவர் ஒப்புக்கொண்டார். இருவரும் விருதை கையிலெடுத்துக் கொண்டு மேடையில் இருந்து பார்வையாளர் பக்கம் சென்றோம்.

"எங்கே போகிறீர்கள்? பெயர் கூட அறிவிக்கவில்லை" என முன்வரிசை ஆசனத்தில் இருந்த கலாநிதி சோமரத்ன திஸாநாயக்க கேட்டார்.

'சிறிது நேரம் இருங்கள்' என சைகை செய்துவிட்டு நான் நடந்தேன். விருதை வழங்க நந்தா மாலினியை நோக்கிச் சென்றோம்.

இதற்கிடையே இன்னுமொரு எண்ணம் தோன்றியது. இது மரபுக்கு எதிரான விடயம்தான். ஆனால் மரபுகளை உடைக்க எங்களுக்குத் தைரியம் இல்லையென்றால், எங்களால் என்ன பயன்?

நான் ஜனாதிபதியிடம் சென்று நந்தா மாலினிக்கு கௌரவம் வழங்கும் நோக்கில் இந்த விருதை அவருக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டேன்.

ஜனாதிபதியும் திரைப்பட விருது வழங்கும் விழாக்கள் ஆரம்பித்ததிலிருந்து சிறந்த பாடகர், பாடகிகளுக்கான விருது வழங்கியதில்லை. பாரம்பரியத்தை உடைக்கும் வகையில் இந்தப் பணியை செய்வதற்கு ஜனாதிபதியும், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவும் இணக்கம் தெரிவித்தனர்.

இராஜாங்க அமைச்சரும் அவ்வாறு செய்வது சிறந்தது என்றார். அதிகாரபூர்வ அனுமதி கிடைத்துவிட்டது. நாம் நினைத்த வேலையும் முடிந்து விட்டது!

ஜனாதிபதி தனது ஆசனத்திலிருந்து எழுந்து நந்தா மாலினியை நோக்கிச் சென்றார். என்ன நடக்கிறது என்று அறியாமல், என் பின்னால் வந்த இரண்டு சக அறிவிப்பாளர்களின் கைகளில் இருந்த எஃப். எம் ஒலிவாங்கியை எடுத்தேன்.

"சிறந்த பின்னணிப் பாடகி – கலாநிதி நந்தா மாலினி....!" என்பதை அதிகாரபூர்வ அறிவிப்பாக வெளியிட்டேன். நந்தா மாலினி அக்காவுக்கு ஜனாதிபதி விருதை வழங்கினார்.

சபையினர் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். ஜனாதிபதி கைகளை உயர்த்தி பாராட்டினார். புகைப்படக் கலைஞர்கள் ஒவ்வொருவராக 'கிளிக்' செய்தனர்.

"1963 ஆம் ஆண்டு உங்களுக்கு முதல் விருது கிடைத்தபோது நான் பார்வையாளராக இருந்து கைதட்டினேன்"என ஜனாதிபதி நந்தா அக்காவின் காதில் குனிந்து கூறினார்.

"சேர்...நீங்கள் இப்போது கூறியதை எல்லாரும் கேட்கும்படி தயவு செய்து கூறுங்கள்" என்று என் கையில் இருந்த ஒலிவாங்கியை ஜனாதிபதியிடம் கொடுத்தேன்.

"1963 ஆம் ஆண்டு 'சரசவி' முதல் விருதை அவர் பெற்றபோது நான் அங்கே இருந்தேன். 60 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று நான் அவருக்கு ஒரு விருது கொடுக்கிறேன். 'கம்பெரலிய' என்ற திரைப் படத்தில் 'தொய்ய பபா நெலவிலி' என்ற பாடலை அவரது குரலில் கேட்ட தருணம் இன்னும் நினைவில் இருக்கிறது.

கம்பெரலிய திரைப்படத்தில் அந்தப் பாடலும் Over the Waves இசை மட்டுமே ஒலித்தது. நாங்கள் அவரது இசையை ரசிக்கிறோம். அவர் செய்த சேவைக்காக நானும் நாட்டு மக்களும் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்" என ஜனாதிபதி தெரிவித்தார்

அரங்கம் முழுவதும் கரகோஷம் ஒலித்தது. நந்தா மாலினியை வாழ்த்திய ஜனாதிபதி தனது இருக்கைக்குச் சென்றார். நானும், இராஜாங்க அமைச்சரும் மேடைக்குச் சென்றோம்.

நந்தா மாலினி நீண்ட ஆயுளுடன் வாழ வாழ்த்துத் தெரிவித்து மீண்டும் ஒருமுறை எழுந்து நின்று மரியாதையையும் அன்பையும் வெளிப்படுத்துமாறு பார்வையாளர்களைக் கேட்டுக் கொண்டேன். அனைவரும் எழுந்து நின்று அதனைச் செய்தனர்.

நந்தா மாலினி அக்காவுக்கு உச்ச அளவில் மரியாதையும் கௌரவமும் வழங்க பங்களித்ததில் எனக்கு ஒரு மனநிறைவும் மகிழ்ச்சியும் பெருமையும் இருக்கிறது.





சமன் அதாவுதஹெட்ட...

# பத்தாம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில் சாதனைத் தமிழர்கள்

தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகத்துடன் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஐம்பெரும் விழா ஜனவரி 6 மற்றும் 7ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநில மத்திய அமைச்சர்கள், முன்னாள் முதல்வர்கள், மேயர்கள், துணைவேந்தர்கள், கல்வியாளர்கள், தொழிலதிபர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வானது நான்கு அமர்வுகளாகவும், பன்னாட்டு சிறுகுடந்தொழில் அதிபர்கள் கலந்து கொள்ளும் வளரும் தமிழகம் கண்காட்சியும், உள்ளடக்கிய ஐம்பெரும் விழாவாக நடைபெற உள்ளது.



இந்நிகழ்வு தமிழர்களை அடையாளப்படுத்தும் நிகழ்வாக நடைபெறும். வெளிநாட்டில் சாதனை புரிந்த தமிழர்களுக்கு சாதனைத் தமிழன் விருதும், தமிழ் மொழியைப் போற்றும் விதமாக பள்ளி, கல்லூரிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு நல்லாசான் விருதும் வழங்கப்பட உள்ளன. இந்நிகழ்வில் தமிழ்நாட்டில் உள்ள சிறு குறுந்தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு நாட்டு அரசு தூதர்களை அழைத்து தொழில் வாய்ப்புகளை பற்றி கருத்தரங்கம் நடத்தவும் பல்வேறு நாடுகளில் உள்ள வர்த்தக சங்கங்களை அழைத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்புகளை தேடுவோர், ஏற்றுமதி செய்ய விரும்புவோர் போன்றோரை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு தொழில் வர்த்தக அமைப்பினர் கருத்துரைக்க உள்ளனர். மேலும் கலை கலாசாரம் பாரம்பரிய உணவு உடை, சித்த ஆயுர்வேத மருத்துவம் போன்றவற்றை உள்ளடக்கிய நிகழ்வும் நடைபெற உள்ளது.

உணவே மருந்து என்ற கொள்கைக்கு இணங்க சிறுதானிய உணவு வகைகளை அயல் நாட்டினர்களுக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வும் உணவு திருவிழாவும் நடைபெற உள்ளன என உலகத்தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத்தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

தொடர்புக்கு +60 166167708




# Ratnam foundation UK அமைப்பினால் அன்பளிப்பு செய்யப்பட்ட Portable PA amplifier ஒலி அமைப்பு

வவுனியா வடக்கு மரக்காரம்பளையில் அமைந்துள்ள வடமாகாண தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்துக்கு Ratnam foundation UK அமைப்பின் ஸ்தாபகர் வைத்திய கலாநிதி இ. நித்தியானந்தன் அவர்களால் ஒலி அமைப்பு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. Portable PA amplifier என்ற இந்த ஒலி அமைப்பு இந்நிலையத்துக்கு பெரிதும் பயன்தரவல்லதாகும்.

அந்த உபகரணத்தை அமைப்பின் சார்பில் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் நிலையத்தின் முகாமையாளர் கலாநிதி மா. தயாகரனிடம் கையளித்தார். இந்நிலையத்தில் நடைபெறுகின்ற பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள், வதிவிடப் பயிற்சி நெறிகள் ஆகியவற்றுக்கு இந்த உபகரணப் பயன்பாடு அதியுச்ச பயனைக் கொடுக்குமென்று கலாநிதி மா. தயாகரன் தெரிவித்தார்.

தங்களது நீண்ட நாள் கோரிக்கையை பூர்த்தி செய்தமைக்காக வைத்திய கலாநிதி இ. நித்தியானந்தனுக்கு அவர் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிலையமானது வதிவிடப் பயிற்சி நெறிக்கான பயிலுநர் தங்குமிட வசதிகள், தகவல் தொழில்நுட்ப கணனி கூடங்கள், போசனகூட வசதிகள் போன்றவற்றைக் கொண்டுள்ளது.

அத்துடன் இயற்கை வனைப்புமிக்க சூழலில் இந்நிலையம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.





# கிரிக்கெட்டை தரமுயர்த்தும் ஜனாதிபதியின் முயற்சியில் இலங்கை மக்கள் நம்பிக்கை

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு நாட்டில் அமைதியின்மை ஏற்பட்ட போது, ஆட்சியை பொறுப்பேற்க எவரும் முன்வராத வேளையில், ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்றவர் ரணில் விக்கிரம சிங்க அவர்கள்.


அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடந்த பொருளாதா ரத்தை மீட்டெடுக்கவே முடியாதென்ற அச்சத்தில், இந்தப் பொறுப்பை பாரமேற்க எதிர்க்கட்சிகள் முன்வரவில்லை. இவ்வுண்மை மக்களுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக, எதிர்க்கட்சியி னர் தங்களுக்கிருந்த அச்சத்தை அரசியல் சாயம் பூசி மறைத்து விட்டனர்.

மக்களால் தெரிவாகாமல் எந்த ஆட்சியையும் பொறுப்பேற்க முடியாதெனக் கூறிய சில தலை வர்கள், ஜனநாயகவாதிகள்போல தங்களைக் காட்டிக்கொள்கின்றனர்.

ஆனால், துணிந்து வந்து ஆட்சியைப் பார மேற்ற ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தான் கூறியதை நிறைவேற்றி சாதித்திருக்கிறார்.

அமெரிக்க டொலரின் பணப்பெறுமதியை நிலையாகப் பேணும் அளவுக்கு அல்லது படு வீழ்ச்சிக்கு சரியாத வகையில், இலங்கை ரூபாவின் பெறுமதியை பேணிவருகிறது ஜனாதி பதியின் அரசியல் நிர்வாகம். இதனால், பொருளா தார மீளெழுகைக்கான சாத்தியங்கள் தென்படத் தொடங்கியுள்ளன.

## சவால்களை பொறுப்பேற்கும் துணிச்சல் ஏனைய அரசியல்வாதி–களுக்கு சிறந்த முன்னுதாரணம்



இதேபோன்றுதான், இன்னுமொரு துணிச்ச லில் பெரிய பொறுப்பை பாரமேற்றுள்ளார் இவர். சரிந்து போயுள்ள நாட்டின் கிரிக்கெட்டை பழைய பெருமை நிலைக்கு கொண்டுவ ரவுள்ளதாக உறுதியளித்துள்ள மையே அது.

ஊடகப்பிரதானிகள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதுபற்றி உறுதியளித்துள்ளமை விளையாட்டு ஆர்வலர்களுக்கு ஆறுதலளித்துள்ளது. இவ்வளவு ஆழத்துக்கு இலங்கை கிரிக்கெட் வேரூன்றியுள்ளதை நினைக்கை யில், மேலைத்தேய நாடுகளின் மனோநிலையே மனக்கண் முன் வருகிறது.

விளையாட்டு வீரர்கள் பெயரில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு ஹீரோ இருக்குமளவுக்கு நாட்டில் விளையாட்டுக்கு மவுசு. இதிலும் ஒருபடி மேலுள் ளது கிரிக்கெட்டின் பிடிப்பு. உலகக் கிண்ணம், ரீ 20, ஒருநாள் போட்டி மற்றும் ஐ.பீ.எல்.போட்டிக் காலங்களில் வீடுகள் களைகட்டுவதும், வீதிகள் தோறும் திரைகளில் போட்டிகளை கண்டுகளிக்க மக்கள் திரள்வதிலிருந்தும் இது புரிகிறது.

இந்த ரசனைக்கு நாடு, வீடு, நகர, கிராம வேறுபாடுகள் இருக் காது. ஏன், வயது மற்றும் ஆண், பெண்ணென்ற வேறுபாடுகளும் கிரிக்கெட்டின் ரசனைகளில் இல்லை. அரசியல்வாதிகள் இதை நன்குணர்ந்துள்ளனர். இதனால் தான்,இலங்கை கிரிக்கெட்டில் நிலவும் ஊழல்களை வெளிக்கொ ணர பாராளுமன்றத்தில் ஒன்று பட்டுள்ளனர்.

2018 முதல் 2023 வரையான காலப்பகுதியிலான இலங்கை கிரிக்கெட் சபையின் கணக்கறிக்கைகளை சமர்ப்பிக் குமாறு, விளையாட்டுத்துறை அமைச்சர் கோரியதால் வந்த விவகாரம் பூதாகரமாகி, சர்வதேச போட்டிகளில் விளையாடுவது தடுக்கப்படுமளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

இவ்வாறு நிகழக்கூடாது என்ப தற்காகவே, இலங்கை கிரிக்கெட் சபையை கலைத்து இடைக்கால சபை நிறுவப் பட்டதை ஜனாதிபதி விரும்பவில்லை. உலகக் கிண்ண போட்டிகள் நடைபெறுகையில், இவ்வாறு நடந்து கொள்வது சர்வதேசத்தில் தாக்கத்தை ஏற் படுத்துமென ஜனாதிபதி ஊகித்தார். இதிலிருந்து அவரது தீட்சண்யம் தெளிவாகிறது.

உலகக் கிண்ணத்தை அர்ஜுன ரணதுங்க தலைமையில் 2006 இலும், ரீ20 கிண்ணத்தை லசித்மலிங்க தலைமையில் 2012 இலும் ஈட்டிய நாட்டின் பெருமைகளுக்கு நடந்தவை என்ன?

தவறானவர்களின் பிடியில் சிக்குமளவுக்கு தரம் குறைந்ததால், சமீப காலமாக எந்தப் போட் டிகளிலும் நமது நாடு பிரகாசிக்கவில்லை.

இதுவே கிரிக்கட் ரசிகர்களின் ஆதங்கம்.

இது, ஆத்திரமாக மாறாதிருக்க காத்திரமான பணிகள் செய்வது அரசியல் தலைமைகளின் பொறுப்பாகியுள்ளது. ரசிகர்களின் வாக்குகளுக்கு தீர்மானிக்கும் திராணியுள்ளதால், அரசியல் கட்சி கள் கவனமாக இதைக் கையாண்டுள்ளன.

முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க வின் முயற்சியில் 1982 இல் நமது நாட்டுக்கு டெஸ்ட்போட்டி அந்தஸ்து கிடைத்தது. அன்றி லிருந்து 1996 வரைக்கும் கிரிக்கெட் உலகின் பார்வை நமது நாட்டுப் பக்கம் தலைகாட்டவே இல்லை. 14 வருடங்களின் பின்னர்தான் தலை நிமிர்ந்தது இலங்கை கிரிக்கெட்.

இப்போது மீண்டும் 15 வருடங்களின் பிறகு ஒளியிழந்து வருகிறது நம்நாட்டு கிரிக்கெட்.

இதை, மீண்டும் பழையநிலைக்கு கொண்டுவர ஜனாதிபதி முயற்சிக்கிறார். இவரது இம்முயற்சி வெற்றிபெறுமென பலரும் நம்புகின்றனர்.பொரு ளாதாரத்தை மீட்ட தலைவருக்கு விளையாட்டை மீட்டெடுப்பது பெரிய பொருட்டில்லை .

ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் பொய் பேசி யதில்லை. உண்மை சொன்னதற்காக சில தேர் தல்களில், இலக்கை அடையாதிருந்திருக்கலாம். ஆனால் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் அண்மைக்கால சாதனைகள், அவரது முன்மொ ழிவுகளை உண்மைப்படுத்தியுள்ளன. இதனால், கிரிக்கெட் விளையாட்டையும் ஜனாதிபதி பெரு மைப்படுத்துவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஏ.ஜி.எம்.தௌபீக்...

# உலகின் முன்னணி தலைவர் பிரதமர் மோடியிடம் காணி, வாகனம், கடன்கள் முற்றாகவே கிடையாது!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சொத்து மற்றும் கடன்கள் பற்றிய தன்னார்வ அறிவிப்பின்படி இந்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரையில் அவரி டம் எவ்வளவு பணம், சொத்துக்கள் இருந்தன என்பது பற்றிய விபரங்கள் பி.எம். இந்தியா இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பிரதமர் மற்றும் அனைத்து மத்திய அமைச்சர்களும் பொது வாழ்வில் தங்களுடைய பொறுப்புகளை கடைப் பிடிக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக தாங்களாக முன்வந்து அவர்களுடைய சொத் துக்கள், கடன்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் கடன் களை முன்வந்து அறிவிப்பார்கள். இவ்வாறான முறையை அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் அறிமுகப்படுத்தினார்.

அப்போது அரசியல் தலைவர்கள் பலர் தாங் களாக முன்வந்து அவர்களுடைய சொத்துகள், கடன்கள் குறித்த தகவல்களை அறிவிக்கும் பழக்கம் தொடங்கியது. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களைத் தொடர்ந்து அனைவரும் இதைப் பின்பற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடி தானாக முன்வந்து தாக்கல் செய்துள்ள சொத் துக்கள், கடன்கள் குறித்த தகவல்களின்படி பல முக்கியமான விஷயங்கள் தெரியவந்துள்ளன.

73 வயதான இந்தியப் பிரதமர் நரேந் திர மோடி பெயரில் ஒரு ஆயுள் காப்பீட்டுக் கொள்கை இல்லை. பிரதமரின் வங்கிக் கணக் கின் இருப்பு வெறும் 574 ரூபா என பல வியப் பளிக்கும் விஷயங்கள் தெரியவந்துள்ளன.

இந்த சொத்து விபரங்கள் அனைத்தும் மார்ச் 31, 2023 ஆம் திகதி முடிவில் திரட்டப்பட்ட தர வுகள் ஆகும். பிரதமர் நரேந்திர மோடி ஏற்கனவே இன்சூரன்ஸ் திட்டத்தை வைத்திருந்த நிலையில், இது முதிர்ச்சி அடைந்துள்ளது. பிரதமர் அந்தப் பணத்தை ஒரு நிலையான வைப்பு நிதித்திட்டத்தில் முதலீடு செய்துள்ளார்.



## பணத்துக்கும், சொத்துகளுக்கும் ஆசைப்படாத தலைவர்!

## அரசாங்க சம்பளத்தை நன்கொடைகளுக்கு வழங்கும் நரேந்திர மோடி

பிரதமர் நரேந்திர மோடியின் மொத்த சொத்து மதிப்பில் பெரும் பகுதி வைப்பு நிதியாக உள்ளது, மேலும் இந்த வைப்பு நிதி நீண்ட காலமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குஜராத் மாநிலத்தின் காந்திநகர் எஸ்.பி.ஐ வங்கிக் கிளையில் நிலையான வைப்புத் திட்டத்தில் சுமார் 2.47 கோடி ரூபாய் வைத் திருப்பதாக நரேந்திர மோடி அறிவித்துள் ளார். கடந்த ஓராண்டில், மோடியின் வைப்பு நிதியின் மதிப்பு சுமார் 37 இலட்சம் ரூபாய் அதிகரித்துள்ளது.

நரேந்திர மோடி 2021_22 ஆம் நிதியாண்டு அறிவிப்பில் காட்டிய 1.89 இலட்சம் ரூபா மதிப் புள்ள காப்பீட்டுக் கொள்கை அவரது FY2223 சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிவிப் பில் இல்லை. இதன் பின்பு புதிய ஆயுள் காப்பீட் டுத் திட்டத்தை மோடி பெறவில்லை.

பிரதமர் நரேந்திர மோடி தேசிய சேமிப்புச் சான்றிதழ் வாயிலாக 9.19 இலட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளார், கடந்த ஒரு ஆண்டில் 14,500 ரூபாய் அதிகரித்துள் ளது. மேலும் மோடியிடம் கடன் களோ, வாகனங்களோ, நிலச் சொத்துகளோ இல்லை.

2020ஆம் ஆண்டு வரையில், பிரதமர் நரேந்திர மோடியிடம் 20,000 ரூபாய் மதிப்புள்ள உள்கட்டமைப்புப் பத்திரங்கள் இருந்தன. பெரும்பாலான அரசியல் தலைவர்க ளைப் போலவே, பிரதமரும் பங்குச் சந்தையில் எந்த விதமான முதலீட்டையும் செய்யவில்லை.

பிரதமர் நரேந்திர மோடி எந்தச் சம்பளமும் வாங் காமல், தான் பெறும் முழுத்தொகையையும் நன் கொடையாக வழங்குகிறார். அவர் ஒரே ஒரு வங்கிக் கணக்கை மட்டுமே பராமரிக்கிறார், அதுவும் காந்தி நகரில் உள்ள எஸ்.பி.ஐ வங்கி கிளையில் இருப்ப தாகும்.

நரேந்திர மோடி குஜராத்தின் முதலமைச்ச ராக ஆனதில் இருந்து இந்த எஸ்.பி.ஐ வங்கிக் கணக்கை பயன்படுத்தி வருகிறார். மேலும் பிரதம ரின் வங்கி இருப்பு வெறும் 574 ரூபாய் மட்டுமே, இந்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரை அவரிடம் ரொக்கமாக 30,240 ரூபாய் இருந்தது குறிப்பிடத் தக்கது.

ஒவ்வொரு ஆண்டும், பிரதமர் மற்றும் அனைத்து மத்திய அமைச்சர்களும் பொதுவாழ்வில் தங்களு டைய பொறுப்புக்களை கடைப்பிடிக்கும் நடவடிக் கைகளின் ஒரு பகுதியாக தாங்களாகவே சொத் துக்கள், கடன்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் கடன்களை முன்வந்து அறிவிப்பார்கள்.

குஜராத் மாநிலத்தில் ஒரு சாதாரண குடும்பத் தில் பிறந்து அம்மாநிலத்தின் முதலமைச்சராக உயர்ந்த பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து 2 முறை மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்று இந்தியப் பிரதமர் இருக்கையில் அமர்ந்திருக்கி றார். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக கருதப்படும் இந்தியாவுக்கு பிரதமரானதன் மூலமாக உலகின் முக்கிய தலைவர்கள் மற்றும் பிரபலமான உலக தலைவர்கள் வரிசையில் முன்னிலை வகித்து வருகிறார் நரேந்திர மோடி.

மோடிக்கு எந்த அசையா சொத்தும் இல்லை. குஜராத் நிலம் கடந்த 2002 ஆம் ஆண்டு பிர தமர் நரேந்திர மோடி குஜராத் முதலமைச்சராக இருந்தபோது தலைநகர் காந்திநகரில் ரூபா 2.3 இலட்சம் மதிப்பில் 3 பேருடன் சேர்ந்து ஒரு நிலத்தை வாங்கினார். தற்போது அவரி டம் அந்த நிலம் இல்லை. தற்போதைய சந்தை மதிப்பின்படி அந்த நிலம் ரூபா 1.1 கோடி இருக் கும் என்று கணக்கிடப்பட்டு உள்ளது.

அசையும் சொத்துக்களைப் பொறுத்தவரை தலா 45 கிராம் எடை கொண்ட 4 தங்க மோதி ரங்கள் பிரதமர் நரேந்திர மோடியிடம் உள்ளன. அவற்றின் மதிப்பு ரூ.14.83 இலட்சம் முதல் ரூ.17.30 வரை இருக்கும் என்று கூறப்படு கிறது.

# அழிவின் விளிம்பில் பலஸ்தீன ஊடகங்கள்!



பலஸ்தீன போராட்டத்தில்ஊடகங்கள் சந்தித்த சவால்களும், அத்துமீறல்களும் எண்ணில டங்காதவை. தற்போதைய இஸ்ரேல்_ பலஸ் தீனம் போரால் இதுவரை 36 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக்குழு உறுதி செய்துள்ளது.

1948 இஸ்ரேல்_ பலஸ்தீன மோதலின் தொடக்கத்தில் இருந்து வெளிநாட்டு போர் நிருபர் கள், தொழில்முறை ஊடகவியலாளர்கள் மற்றும் உள்ளூர் பத்திரிகையாளர்கள் எனப் பலர் கொல்லப் பட்டுள்ளனர்.

பலஸ்தீன போராட்டத்தில் ஊடகங்கள் சந்தித்த சவால்களும், அத்துமீறல்களும் எண்ணிலடங்கா தவை. பலஸ்தீன பத்திரிகைகளில் ‘அல் அய்யாம்’ பலஸ்தீனத்தின் இரண்டாவது பெரிய தினசரி செய் தித்தாளாகும்.

‘அல் டிஃபா’ 1934 மற்றும் 1948 இற்கு இடையில் வெளியான ஒரு செய்தித்தாளாகும். பெலாஸ்டின், 1911 முதல் 1967 வரை யாஃபாவி லும் பின்னர் கிழக்கு ஜெருசலேமையும் தளமாகக் கொண்டு வெளியான ஒரு செய்தித்தாளாகும்.

காசாவில் இருந்து செயல்படும் முதன்மையான வாராந்திர செய்தித்தாள்களில் அல்ஹயாத், அல்ஜ டிதா, பலஸ்தீனிய தேசிய அதிகாரசபையின் அதிகா ரபூர்வ தினசரியாகும். போர்க் காலங்களில் இந்த ஊடகங்கள் மீதான தடைகளும் அத்துமீறல்களும் தொடர்ந்தன.

அல்ஹுரியா, DFLP உடன் இணைந்த அரசியல் செய்தித்தாள் (பாலஸ்தீன விடுதலைக்கான ஜனநா யக முன்னணி)வெளியாகிறது. அல் ஜாமியா, அல் அரேபியா, 1927 மற்றும் 1935 இற்கு இடையில் வெளியான தினசரி செய்தித்தாள்.

லிசான் அல் அரப், ஜெருசலேமில் உள்ள ஒரு செய்தித்தாள் 1921 மற்றும் 1925 க்கு இடையில் வெளியிடப்பட்டது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் பலஸ்தீனம்_ இஸ்ரேல் ஜேர்னல், ஒரு சுயாதீனமான பத்திரிகை. இலாபநோக்கற்றதாக, காலாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படுகிறது. அத்து டன் தி பலஸ்தீன டெலிகிராப், காசா பகுதியில் உள்ள முதல் இணைய செய்தித்தாள் ஆகும்.

பலஸ்தீன டைம்ஸ் என்ற பெயரில் 2006 முதல் 2007 வரை ஒரே ஆங்கிலமொழி தினசரி பலஸ்தீனிய செய்தித் தாள் வெளிவருகிறது. திஸ் வீக் இன் பலஸ்தீனமானது, பாலஸ் தீனத்தின் கலாசார, சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை உள்ள டக்கிய ஒரு மாத இதழாகும்.

அல்குத்ஸ், ஜெருசலேமைத் தளமாகக் கொண்ட தினசரி செய் தித்தாள். அல்குத்ஸ் ஒரு சுயாதீன பான்அரபு தினசரி செய்தித்தாள் ஆகும். அது லண்டனில் வெளியி டப்பட்டது.

பலஸ்தீன தொலைக்காட்சி:

பலஸ்தீனத்தில் உள்ள


## தொடரும் ஊடகவியலாளர் படுகொலைகள்!

தொலைக்காட்சியானது வரலாற்று நிகழ்வுகள், பொருளாதார அபிவிருத்தி நோக்கிச் செல்லும் நிகழ்ச்சிகளை காண்பிக்கிறது. ஆனால் ஒரு முக்கிய கருப்பொருள் அரசியல். பலஸ்தீனிய அதிகாரம் அதன் குடிமக்களுக்காக உருவாக்கப்பட்ட பொதுநி கழ்ச்சிகள் மூலம் ஒரு பகுதியாக கலாசார விழுமி யங்களை உருவாக்குகிறது. குழந்தைகள் நிகழ்ச் சிகள் முதல் நாடகங்கள் வரை நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகும்.

பலஸ்தீனிய அதிகாரசபை அரசாங்கத்தின் ஒப்புத லுடன் மற்றும் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகு திகளில் பலஸ்தீனிய அதிகாரத்தின் குடிமக்களால் பார்க்கப்படும் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவ னங்கள் மேல் எப்போதும் ஓர் இராணுவ அச்சுறுத் தல் இருந்த வண்ணமே உள்ளது.

அல்அக்ஸா டிவி, அல்குட்ஸ் டிவி, பாலஸ்தீன ரேடியோ மற்றும் டிவி கோர்ப்பரேஷன், பலஸ் தீனிய ஒலிபரப்புக் கழகம்(PBC), பலஸ்தீனிய செயற்கைக்கோள் சேனல் மற்றும் சனாபெல் டி.வி ஆகியன முக்கியமான பாலஸ்தீன தொலைக்காட்சி நிறுவனங்களாகும்.

பலஸ்தீனிய ஆட்சி அதிகாரத்தின் அதிகார எல் லைக்குள் உட்பட்ட பலஸ்தீன தொலைக்காட்சி, 1 ஜுலை 1994 இல் நிறுவப்பட்டது. இஸ்ரேலிய இராணுவ அச்சுறுத்தலுக்கு எப்போதும் முகங்கொ டுக்கும் பாலஸ்தீன தொலைக் காட்சி 19 ஜனவரி 2002 அன்று இஸ்ரேல் பாதுகாப்புப் படைக ளால் அழிக்கப்பட்டது.



பலஸ்தீனிய துப்பாக்கிதாரி யால் ஆறு பேர் கொல்லப்பட்ட தற்கு பதிலடியாகக் கூறி, ரமல் லாவில் உள்ள பலஸ்தீனிய ஒலிபரப்புக் கழக(PBC) இன் ஐந்து மாடி பிரதான கட்டடம் மற்றும் ஒலிபரப்புக் கோபுரத்தை இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் அழித்தனர்.

பலஸ்தீனத்தில் அல் அய்யம்,அல்ஹயாத் அல்ஜடிதா ,அல் கர்மில் ,அல் மனார்,அல் மசார் ஆகிய பத்திரிகைகள் போர்க்காலத்திலும் வெளிவ ருகின்றன. காசாவில் தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் இணையப் பிரச்சினைகள் நிலவி வருகின் றன. தொடர்ந்து காசா நகரில் இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல் பத்திரிகையாளர்கள் மேல் திணிக்கப் பட்டுள்ளதுடன் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் அல் குத்ஸ், பாலாஸ்தீன் அல்முஸ் லிமா, அல்இத்திஹாத், குல் அல் அரபு அல்மதீனா ஆகிய ஊடகங்களின் பத்திரிகையாளர்கள் இஸ்ரே லின் நேரடி அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப் பட்டுள் ளனர். பலஸ்தீனத்தின் ஹமாஸ்_ இஸ்ரேல் படையி னருக்கு இடையே கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பித்த போர் தற்போது தீவிரமாக தொடர்ந்து வருகிறது. இஸ்ரேல் படையினர் காசா பகுதியை கடு மையாகத் தாக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் காசாவில் போர் பற்றிய விபரங் களைச் சேகரிக்க பல்வேறு நாட்டில் இருந்து பத்திரி கையாளர்கள் சென்றிருந்தனர். தகவல் சேகரிக்கச் சென்றவர்களில், இதுவரை 36 பத்திரிகையாளர் கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 30 பலஸ்தீ னர்கள், 4 பேர் இஸ்ரேலைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒருவர் லெபனானை சேர்ந்தவர் எனத் தெரியவந் துள்ளது.

பல பத்திரிகையாளர்களுக்கு இஸ்ரேல் நேரடி அச்சுறுத்தலை கொடுத்துள்ளதால் போர்க்கள தகவல்களை சேகரிப்பதை பத்திரிகையாளர்கள் குறைத்துள்ளனர். அத்துடன் பலஸ்தீன பத்திரி கையாளர்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

தற்போதைய இஸ்ரேல்_ பலஸ்தீனம் போரால் இதுவரை 36 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச பத்திரிகையா ளர்கள் பாதுகாப்புக் குழு உறுதி செய்துள்ளது.

இதற்கு முன்பாக 1992 – 2022 வரை இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீ னப் பிரதேசத்தில் வேறு 25 ஊடகவியலாளர் கள் கொல்லப்பட்டுள்ளனர் என உழைக்கும் பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு ஆவணப்படுத்தியுள்ளது.

மே 2022 வரை, மனிதாபிமான விவகா ரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் 2008 முதல் மோதலின் விளைவாக 6,036 பலஸ்தீனியர்கள் மற்றும் 272 இஸ்ரேலிய இறப்பு கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஆவணப்படுத்தியுள்ளது.

ஷிரீன் அபு அக்லே (Sirin Abu Aqle) ஏப்ரல் 3, 1971இல் பிறந்த அமெரிக்க ஊடகர் 25 ஆண்டு களாக அல் ஜஸீராவின் பத்திரிகையாளராகப் பணி யாற்றி உள்ளார். இவரின் கொலை சர்வதேச ஊட கப்பரப்பில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக் கரையில் உள்ள ஜெனின் அகதிகள் முகாமில் நீல நிற மேலங்கி அணிந்தபடி ஊடகராக பணியாற்றிய வேளையில் இஸ்ரேலிய படைவீரர் ஒருவரால் கொல்லப்பட்டார்.

பலஸ்தீனப் பகுதிகளில் பல தசாப்தங்களாக ஊடகப் பணி செய்ததற்காக மத்திய கிழக்கு முழுவ தும் அபு அக்லே மிகவும் பிரபல்யமான ஒருவராக இருந்தார். மேலும் பல அரபு மற்றும் பாலஸ்தீனிய பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாகக் காணப்பட்டார்.

தற்போதைய போர்ச்சூழலில் 26 ஒக்டோபர் 2023 அன்று, அவர் கொல்லப்பட்ட இடத்தில் எழுப் பப்பட்ட ஒரு நினைவுச்சின்னம் இஸ்ரேலிய இராணு வத்தால் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டது.

இது இவ்விதமிருக்க, காசா பகுதி போரின் போது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய தகவல் கள் தற்போது வெளியாகி உள்ளன. ஒக்டோபர் 7 இல் முகமது அல்சால்ஹி, நான்காவது அதிகாரச் செய்தி நிறுவனத்திற்கான புகைப்படப் பத்திரிக்கை யாளர், மத்திய காசாவில் உள்ள பாலஸ்தீனிய அக திகள் முகாமுக்கு அருகாமையில் சுடப்பட்டார்.

அதேநாளில் முகமது ஜார்கோன், ஸ்மார்ட் மீடியா வுடன் இணைந்த ஒரு பத்திரிகையாளர், ரஃபாவின் கிழக்கே உள்ள ஒரு பகுதியில் மோதல் குறித்து செய்தி வெளியிட்டபோது சுட்டுக் கொல்லப்பட்டார். ஒக்டோபர் 7 இல் இப்ராஹிம் முகமது லாஃபி, ஐன் மீடியாவின் புகைப்படக் கலைஞர், ஈரெஸ் கடக்கும் இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அசாத் ஷாம்லாக், அக்டோபர் 8இல் ஒரு ஃப்ரீ லான்ஸ் பத்திரிகையாளர், தெற்கு காசாவில் ஷேக் இஜ்லினில் உள்ள அவர்களது வீட்டில் இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது உறுப்பினர்களுடன் கொல்லப்பட் டார்.

ஒக்டோபர். 10இல் ஹிஷாம் அல்ன்வாஜா, கபார் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாள ரும் ரிமாலில் வான்வழித் தாக்குதலில் கொல்லப் பட்டார். அதே நாளில் முகமது சோப், கபார் நியூஸ் ஏஜென்சியின் புகைப்படக் கலைஞரும் ரிமாலில் வான் வழித் தாக்குதலில் கொல்லப் பட்டார்.

இதுவரை 36 ஊடகர்கள் இஸ்ரேலிய படைகளால் கொல்லப்பட்டுள்ளனர்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...
அவுஸ்திரேலியா

## இலங்கை அணிக்கு...

உறுதி செய்யும் நடவடிக்கையை முன்னெடுப்பது மிக அவசியமென, கிரிக்கெட் தொடர்பான அமைச்சரவை உப குழுவின் உறுப்பினர், அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார். இதன் பின்னர், தமது தடையை நீக்கிக்கொள்வதற்கு வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், இதனை அரசியல் ரீதியாக முன்னெடுக்கக் கூடாதென்பதும் முக்கியமாகுமெனவும், அவர் தெரிவித்தார். இதேவேளை, ஐ.சி.சி உடன் கலந்துரையாடுமாறு அமைச்சரவை உப குழுவுக்கு ஜனாதிபதி பொறுப்பை ஒப்படைத்துள்ளார். அதற்கான வேண்டுகோளை தாம் ஐ.சி.சி. க்கு விடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"கிரிக்கெட் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி நியமித்த அமைச்சரவை உப குழு தொடர்பாக பலருக்கும் தெளிவில்லாமல் உள்ளது. இந்தக் குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு என்னவென்பது தொடர்பாக சிலர் குழப்பங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர். கிரிக்கெட் நிர்வாகம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக பரிந்துரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்காகவே இந்தக் குழுவை அவர் நியமித்துள்ளாரென்பதை அனைவரும் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், கிரிக்கெட் சபை, விளையாட்டுத்துறை அமைச்சர், விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ஆகிய தரப்பினரை நாம் சந்தித்துள்ளோம்.முதலில் பாராளுமன்றமும் இணைந்து விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் தடை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமானால், எனக்கு ஜனவரியில் 19க்கு கீழ் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி மட்டுமின்றி, டிவிசன் 01 கிடைக்காமலும் போகலாம். சிலர் நினைக்கலாம் தடை செய்யப்பட்டாலும் பரவாயில்லை. உள்ள சிக்கல்கள் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று. எனினும், அவ்வாறு டிவிசன் 01 விளையாட சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால், எமது விளையாட்டு வீரர்களுக்கு கிடைக்க வேண்டிய அனுபவங்களும் கிடைக்காது. அவர்கள் முன்னோக்கிச் செல்வதும் தடைப்பட்டு விடும்.

மகளிர் கிரிக்கெட் அணியின் 19 வயதின் கீழ் மற்றும் 21 வயதின் கீழ் வீரர்கள் அனைவருக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும். நாம் சர்வதேச ரீதியான பிரச்சினையை தீர்ப்பதற்கு பாராளுமன்றத்தையோ, அரசியலையோ சம்பந்தப்படுத்தக்கூடாது.

எமது நாட்டுக்கு சர்வதேச ரீதியான பிரச்சினைகள் பெருமளவு உள்ளன. இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளருக்கு அல்லது ஆசிய கவுன்சிலின் செயலாளருக்கு கைநீட்டி பிரயோசனமில்லை. உருவாகியிருப்பது எமது நிர்வாகம் தொடர்பான பிரச்சினையே. அதனை சரி செய்வதற்கு நாம் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து வேறு நாடுகளை குறை சொல்லிக்கொண்டிருக்க முடியாது" என்றார்.

## 08 இலட்சம் மாணவருக்கு...

தீர்மானித்துள்ளதாகவும் அடுத்த மாத நடுப்பகுதியில் மாணவர்களுக்கு அதற்கான வவுச்சரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கான அமைச்சரவை அனுமதியும் திறைசேரியின் அனுமதியும் கிடைத்துள்ளதாகவும் அடுத்த வருடத்துக்கும் அதேயளவு பாதணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாடொன்றின் உதவியுடன் பாடசாலை மாணவர்களின் பகல் உணவுக்காக மேலும் நிதியை பெற்றுக் கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொண்டதுடன், ஐந்தாம்தர புலமைப் பரிசிலுக்காக ஒதுக்கப்படும் 750 ரூபாவை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார். இதேவேளை, பாடசாலை சீருடைக்காக 7 பில்லியன் ரூபா நிதி இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இலவச பாடப்புத்தகங்களுக்காக 20 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று டளஸ் அழகப்பெரும மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் முன்வைத்த சில கேள்விகளுக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐந்தாம்தர புலமைப்பரிசில் தொடர்பாக தெரிவித்த அவர்,

"சிங்களமொழி மூலம் 20,000 மாணவர்களையும் தமிழ்மொழி மூலம் 5,000 மாணவர்களையும் உள்ளடக்கியே வெட்டுப்புள்ளி வருகிறது. இந்த வெட்டுப்புள்ளியானது மாணவர்கள் சித்தியடையவில்லையென்பது அல்ல. புலமைப்பரிசில் வழங்க எதிர்பார்க்கும் மாணவர்களின் ஒருபகுதியை வைத்தே இது நிர்ணயிக்கப்படுகிறது. நூற்றுக்கு அதிகமான புள்ளிகளை மதிப்பிடுமாறு அமைச்சர் பந்துல குணவர்தன ஆலோசனையொன்றை சபையில் முன்வைத்தார். அதில் சிங்களமொழி மூல மாணவர்கள் 20,000 பேர், தமிழ்மொழி மூல மாணவர்கள் 5,000 பேர் என்ற எண்ணிக்கையை மேலும் அதிகரிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அவ்வாறு வெட்டுப்புள்ளி மேலும் சிறிது குறைவடையும்.

அத்துடன், புலமைப்பரிசிலுக்காக ஒதுக்கப்படும் 750 ரூபாவை ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கும் அவர் யோசனை முன்வைத்துள்ளார். எனினும், அதனை 1,500 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென்பதே எனது நிலைப்பாடாக உள்ளது. அது தொடர்பாக நாம் ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். இந்த விடயங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படும். வரவு செலவுத் திட்டத்துக்குள்ளேயே அது தொடர்பாக கவனம் செலுத்த முடியும். பாடசாலை சீருடைக்காக 7 பில்லியன் ரூபா நிதி இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும், அதில் நான் 5.5 பில்லியன் ரூபாவை அரசாங்கத்துக்கு மீதப்படுத்தி வழங்கியுள்ளேன். சீனத் தூதுவருடன் நான் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பயனாக அந்த நாட்டிலிருந்து எமக்கு சீருடைத் துணி கிடைக்கவுள்ளது.

மூன்று கப்பல்கள் சீருடைத் துணியுடன் விரைவில் நாட்டுக்கு வரவுள்ளன. இலவச பாடப்புத்தகங்களுக்காக 20 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், இம்முறை பதிப்பாளர்களுக்கு டெண்டர் வழங்கும் போது அந்தத் தொகை மேலும் குறைந்துள்ளது. அதன் மூலமாக நிதியை மீதப்படுத்தி அரசாங்கத்துக்கு வழங்க முடியும்" என்றார்.

## எதிர்க்கட்சிகள் சில...

தவறான பிரசாரங்களை முன்னெடுப்பதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். ஆகையால், இவற்றை நம்பி பொதுமக்கள் ஏமாந்துவிடக் கூடாதெனவும், அவர் தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் (16) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"நாட்டின் தற்போதைய நிலைமையில் மிகச் சிறந்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், 'அஸ்வெசும' வேலைத்திட்டத்தினூடாக 18 இலட்சம் குடும்பங்களுக்கு நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போது, 60 பில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டது. ஆனால், இம்முறை 183 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சமுர்த்திக் கொடுப்பனவைப் போன்று 1,000 அல்லது 2,000 ரூபா வழங்காமல், மிகக் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 15,000 ரூபாவரை வழங்கப்படுகின்றது. அடுத்த கட்டத்திலுள்ளோருக்கு 7,500 ரூபாவும் ஏனையோருக்கு 5,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது.

அதேபோன்று, 13 இலட்சம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 10,000 ரூபா சம்பளக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஓய்வு பெற்றுள்ள 7,300,000 பேருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவும் 2,500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மாணவர்களுக்கான காப்புறுதி வேலைத்திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக சுமார் 3 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றை தவிர, இன்னும் என்ன செய்ய வேண்டும்? காலம் செல்லச் செல்ல பொருட்களின் விலைகளும் குறைவடையும். ஒரு சிலர் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காகவும் இதனை தவறான விமர்சிக்கின்றனர்.

## ஒரே குடும்பத்தை சேர்ந்த...

எயார் இந்திய விமான நிலைய ஊழியர் ஒருவரை நேற்று முன்தினம் (16) பொலிஸார் கைது செய்துள்ளனர். கர்நாடகம் மாநிலத்தினுடைய பெலகாவி மாவட்டத்தின் குடாச்சியைச் சேர்ந்த 46 வயதுடைய ஹசீனா மற்றும் அவரது மூன்று பிள்ளைகளான 23 வயதுடைய அஃப்னான், 23 வயதுடைய அய்னாஸ், 12 வயதுடைய அசெம் ஆகியோரே கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, "ஹசீனாவின் கணவர் டுபாயில் பணிபுரிந்து வருவதால், தன்னுடைய மூன்று பிள்ளைகளுடன் குடாச்சியிலுள்ள உறவினரான 70 வயதுடைய ஹாஜிராவுடன் ஹசீனா வசித்து வந்தார்.இந்நிலையில், கடந்த 12ஆம் திகதி ஹசீனாவின் வீட்டினுள் மர்ம நபரொருவர் புகுந்து, இவர்கள் 4 பேரையும் கத்தியால் சரமாரியாகத் தாக்கிய போது, இவர்கள் உயிரிழந்தனர். இதேவேளை, உறவினரான ஹாஜிரா படுகாயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், எயார் இந்திய விமான நிலைய ஊழியரைக் (வயது 35) கைது செய்துள்ளதுடன், இவரிடம் நடத்திய விசாரணையில் ஒருதலையாக 23 வயதுடைய அய்னாஸை இவர் காதலித்தமை தெரியவந்தது.

இவர் தனது காதலுக்காக கொலை செய்தாரா அல்லது வேறு காரணத்துக்காக கொலை செய்தாரா எனும் கோணத்தில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## மாகாணசபைக்கு முழு...

தீர்மானம் இயற்றும் நிறுவனங்களாக இல்லாமல் சட்டம் இயற்றும் நிறுவனங்களாக மாகாண சபைகள் மாற வேண்டும். அப்பொழுதே புலம்பெயர் தமிழர்கள் அச்சமின்றி, இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொள்ள முன்வார்களென, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கு அவர்களின் முதலீடுகள் தேவையென்பதை உண்மையிலேயே ஜனாதிபதி விரும்பினால், அவர்களின் முதலீடுகள் பாதுகாப்பாக இருக்குமென்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி வழங்க வேண்டும். அதற்கு மாகாண சபைகள் முழுமையான அதிகாரம் பெற்றிருப்பது அவசியமெனவும், அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடனேயே மாகாண சபைகள் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அத்துடன், அரசியல் சாசனத்துக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவரை பதின்மூன்றாவது திருத்தத்துக்கு மேலதிகமாக சென்று, அதிகாரங்களை வழங்குவோமென்றும் மாகாண சபைகளை சரியான முறைகளில் நடைமுறைப்படுத்துவோமென்றும் ஐ.நா. செயலாளருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கும் இந்திய தலைவர்களுக்கும் பல்வேறுபட்ட உறுதிமொழிகளைக் கொடுத்தபொழுதிலும் கூட, கடந்த ஐந்து வருடங்களாக மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் கூட மாகாணசபைகள் இயங்குமா என்ற கேள்வியும் எழக்கூடிய சூழ்நிலை இன்று தோன்றியிருக்கின்றது. ஜனாதிபதியும் ஆளும் கட்சியினரும் அடுத்த வருடத்தை தேர்தல் ஆண்டாக குறிப்பாக பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெறுமென்று கூறி வருகின்றனர். ஆனால், கடந்த ஐந்து வருடங்களாக நடைபெறாத மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எப்பொழுது நடைபெறுமென்பது தொடர்பாக எவ்வித அறிவித்தல்களும் இல்லை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருமான இலக்குகளை அடைவதில்...

'தேசிய பட்ஜெட் 2024' எனும் கருப்பொருளில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"எதிர்வரும் வருடத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கத்தால் முடிந்தாலும், சர்வதேச நாணய நிதியத்தால் நிர்ணயிக்கப்பட்ட வருமான இலக்குகளை விட இலங்கை தொடர்ந்தும் பின்தங்கியிருப்பதால், வரி நிவாரணம் வழங்க முடியாது. 2024 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் மூலம் அரசாங்க நிறுவனங்களால் திரட்டப்பட்ட உள்ளூர் கடனை மறுசீரமைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்காக அரச வங்கிகளுக்கு மறு மூலதனமாக்குவதற்கு 450 பில்லியன் ரூபாவை ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எவ்வாறாயினும் மறுமூலதனமாக்கல் நடவடிக்கையானது, உள்ளூர் ரூபா மதிப்புள்ள சந்தைகளை பாதிக்காது. 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன் ஒரு டிரில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கை மின்சார சபையானது, அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய 800 பில்லியன் ரூபா கடனைக் கொண்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் காரணமாக வரி செலுத்துவோர் நிதியிலிருந்து மூலதன உட்செலுத்துதல் மூலம் சந்திக்க வேண்டிய பெரிய இழப்புகளை பதிவு செய்யும் அபாயத்தை வங்கிகள் எதிர்கொள்கின்றன.

மறுமூலதனமாக்கலுக்கு ஒதுக்கப்பட்ட 450 பில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக அரசுக்கு சொந்தமான இரண்டு வங்கிகளின் 20 சதவீத பங்குகளை மூலோபாய முதலீட்டாளர்கள் அல்லது பொதுமக்களுக்கு, மூலதனத்தை மேம்படுத்தவும் வரி செலுத்துவோர் நிதியின் சுமையை குறைக்கவும் வழங்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## ஊழல் மோசடிகளை...

செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செயலகத்துக்கு கடந்த முறையை விட அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"ஜனாதிபதி தனது வரவு செலவுத் திட்ட உரையின் போது, புத்த பெருமான் தெரிவித்த சகவாழ்வு போதனையை தெரிவித்திருந்தார். சிக்கனமாக வாழப் பழகிக்கொள்ள வேண்டுமென்பதையே இதன் மூலம் அவர் தெரிவிக்க முனைகின்றார்.

ஆனால், வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி செயலகத்துக்கு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகமாகவே இந்த முறை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கல்வி நடவடிக்கைகளுக்கு கடந்த முறையை விட குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கொள்கைக்கமைய நாட்டின் மொத்த வருமானத்தில் 5 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், இம்முறை 2 சதவீதத்துக்கும் குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்றினால் மட்டுமே...

நாட்டின் பொருளாதார பாதிப்புக்கு பொறுப்பாளிகளானவர்கள் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை அடுத்து, நீதித்துறைக்கும் சட்டவாக்கத் துறைக்கும் இடையில் முரண்பாடுகள் உருவாகும் நிலை காணப்படுவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தினூடாக தீர்மானம் மேற்கொள்ள வேண்டுமெனவும் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (17) விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் பாராளுமன்றத்தில் மேலும் உரையாற்றிய போது, "அரசியலமைப்பின் 148ஆவது உறுப்புரைக்கமைய, நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கே காணப்படுகிறது. நிதி தொடர்பான கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் பாராளுமன்றத்தினூடாக இயற்றப்பட்டு, நிதி அமைச்சுக்கும் மத்திய வங்கிக்கும் வழங்கப்படுகிறது. மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சின் உயர் அதிகாரிகளின் ஆலோசனைகள் மற்றும் தீர்மானங்களுக்கமையவே ஜனாதிபதி, பிரதமர் உட்பட அரசாங்கம் செயற்படுகிறது. பாராளுமன்றத்தினூடாகவே மத்திய வங்கிக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. ஆகவே, பாராளுமன்றத்தை தவிர்த்து பிற தரப்பினரால் மத்திய வங்கியை கேள்விக்குள்ளாக்க முடியாது. பொருளாதார பாதிப்பு தொடர்பாக ஆராயும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் எனக்கு அனுமதி வழங்கினால், பொருளாதார பாதிப்பு தொடர்பாக நான் பல விடயங்களை அக்குழுவில் வெளிப்படுத்த முடியும்" என்றார்.

## போதகர் ஜெரோமை...

இதேவேளை, நாட்டுக்கு அவர் வந்த பின்னர் 48 மணி நேரத்தினுள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் டிஜிட்டல் தடயவியல் பிரிவில் முன்னிலையாகி வாக்குமூலம் அளிக்க வேண்டுமெனவும், நீதிமன்றம் தெரிவித்தது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மதங்களுக்கு எதிரான சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்த ராஜபக்ஷவுக்கு...

அவரது வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"30 வருடமாக புரையோடிப் போயிருந்த யுத்த சூழலை இல்லாமல் செய்து, உலகில் இலங்கையை சமாதான பூமியாக அடையாளம் காட்டியவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆவார்.

இவரது காலத்தில் வடக்கில் வசந்தம், கிழக்கில் உதயம் எனும் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முதலமைச்சரை நியமனம் செய்வதற்கும் வடக்கில் மாகாணசபை தேர்தலை நடத்தி அதன் மூலம் தமிழ்க் கட்சி தலைவரை முதலமைச்சராக வருவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தல விமானத்தளம், அதிவேக பாதைகளை போன்றவற்றை அமைத்து இலங்கை நாட்டை பிரமிக்கத்தக்க அளவு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டார்.

இந்நிலையில், இவரது சேவை தொடர எல்லாம் வல்ல இறைவன் திருப்பதி வெங்கடேஷ்வரப் பெருமான் அருள் தரவேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு வருகை தரவுள்ள...

கோரியுள்ளனர். சீனாவின் இயற்கை வளங்களுக்கான அமைச்சுக்கு சொந்தமான கப்பலே இலங்கைக்கு வருகை தந்து, இலங்கையின் விசேட பொருளாதார வலயத்தினுள் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை இந்தக் கப்பல் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியையே இலங்கை அரசாங்கத்திடம் சீன அதிகாரிகள் கோரியுள்ளனர்.


இவ்வாறிருக்க, இந்தியாவின் கடும் கரிசனைக்கு மத்தியில் கடந்த ஒக்டோபர் மாதம் சீனக் கப்பலொன்று இலங்கைக்கு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


## இன்றைய பலன்கள்


### ( 18. 11. 2023 )



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**

*போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.*

**ரிஷபம்:**

*ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.*

**மிதுனம்:**

*மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.*

**கடகம்:**

*தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.*

**சிம்மம்:**

*எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.*

**கன்னி:**

*தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.*

**துலாம்:**

*நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.*

**விருச்சிகம்:**

*தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.*

**தனுசு:**

*ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.*

**மகரம்:**

*உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.*

**கும்பம்:**

*லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.*

**மீனம்:**

*அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.*

## யாழ். இந்து மகளிர் கல்லூரி...

இந்த மாணவி 196 புள்ளிகளை பெற்றுள்ளார். இம்மாணவி கருத்து தெரிவித்த போது, எதிர்காலத்தில் தான் விஞ்ஞானியாக வந்து இலங்கைக்கு பெருமை சேர்க்கவுள்ளதாக தெரிவித்தார். 2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாண இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையை சேர்ந்த 110 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர்.

இதில் 35 மாணவர்கள் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளனர்.

## பாடசாலை கல்வியை டிஜிட்டல்...

ஆர்.ஐ.டி.அலஸின் 10ஆவது நினைவுதினத்தையிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"உலகம் தொழில்நுட்பத்துடன் முன்னோக்கிச் செல்லும் போது, எமது பிள்ளைகளின் கல்வித் தேவையை தாமதப்படுத்த முடியாதென்பதுடன், அதற்கு அவசியமான கல்வி மறுசீரமைப்புகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில், பாடசாலைக் கல்வியை டிஜிட்டல் மயமாக்கவும் எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான புத்தங்கள் தற்போதும் அச்சிடப்பட்டுள்ளதுடன், சீருடைகள் அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக வழங்கப்படும். அத்துடன், அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் வேலைத் திட்டத்தையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

யுனெஸ்கோவுடன் இணைந்து 8 பாடசாலைகளைச் சேர்ந்த 8 இலட்சம் மாணவர்களுக்கு பாதணிக் கூப்பன்களை பகிர்ந்தளிக்கவுள்ளோம்.

அரசாங்கத்தின் நிதியை மாத்திரம் பயன்படுத்தாமல், பிரான்ஸின் உதவியுடன் பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகளை பெற்றுக்கொடுப்போம். நான்கு வருடங்களினுள் இந்த உதவிகள் நாட்டுக்கு கிடைக்கும்" எனத் தெரிவித்தார்.

## 'கோப்' குழுவின் அமர்வுகள்...

என்பதால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொழுகைக்காக அந்த நேரத்தில் செல்வார்களானால் அவர்களால் அந்த குழு அமர்வில் கலந்து கொள்ள முடியாது போகும்.

குறிப்பாக ரவூப் ஹக்கீம், எஸ்.எம். மரிக்கார் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த குழு அமர்வில் கலந்து கொள்ள முடியாமல் போகும்.

அது தொடர்பில் கவனத்திற் கொள்ளுமாறு சபாநாயகரைக் கேட்டுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது சபையில் குறிப்பிட்டார்.

கோப் குழு தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட கருத்துக்களையடுத்து சபையில் அறிவிப்பொன்றை விடுத்த சபாநாயகர், நேற்றைய தினம் மதியம் ஒரு மணிக்கு கூடவிருந்த அமர்வு இடம்பெற மாட்டாது என்றும் அது மட்டுமன்றி மறு அறிவித்தல் வரை கோப் குழு கூட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் சபையில் தெரிவித்தார்.

அதனையடுத்து குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., கோப்குழு அமர்வை பிற்பகல் 02 மணிக்கு நடத்த முடியும் என்றும் ஆலோசனையொன்றை முன்வைத்தார்.

அதற்கு பதிலளித்த சபாநாயகர், கோப் குழுவில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் குழு அமர்வை நடத்த முடியும் என்றும் குறிப்பிட்டார்.

## புலமைப்பரிசில் பரீட்சை...

வெளியிட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களுக்குமான சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கான வெட்டுப்புள்ளிகளையே இலங்கை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, 2023ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து, பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான விடைத்தாள் மீள் பரிசீலனைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் காலத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், இம்மாதம் 27ஆம் திகதி முதல் டிசம்பர் 4ஆம் திகதி வரை பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமென, இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது. நிகழ்நிலை முறை மூலம் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் வெட்டுப்புள்ளி விபரம் பின்வருமாறு:

கொழும்பு 147, கம்பஹா147, களுத்துறை147, கண்டி147, மாத்தளை147, நுவரெலியா144, காலி147, மாத்தறை 147, ஹம்பாந்தோட்டை143, யாழ்ப்பாணம் 145, கிளிநொச்சி144, மன்னார் 143, வவுனியா 145, முல்லைத்தீவு145, அம்பாறை 145, திருகோணமலை144, குருநாகல்147, புத்தளம் 143, அநுராதபுரம் 143, பொலன்னறுவை143, பதுளை144, மொனராகலை143, இரத்தினபுரி144, கேகாலை 147.

# கிழக்கின் குரல்



## பொத்துவில் ஆத்திமுனை கிராமத்தில் காட்டு யானைகள் தொல்லை அதிகரிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் ஆத்திமுனை கிராமத்திற்குள் தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை (17) அதிகாலை ஆத்திமுனை ஹிஜ்ரத் நகரத்திற்குள் உட்புகுந்த காட்டு யானை பல்வேறு சேதங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், அல்ஸபா பள்ளிவாசலின் வேலியையும் உடைத்துள்ளதாக பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆத்திமுனை பிரதேசத்தில் குப்பை மேட்டில் குவிந்து காணப்படும் திண்மக்கழிவுகளை உட்கொள்வதற்காக குவியும் யானைகள் அப் பகுதில் உள்ள விவசாய பயிர்களையும் மற்றும் பயன்தரும் மரங்களையும் சேதமாக்குவதுடன் வீதியால் பயணிப்பவர்கள் மற்றும் அதனை அன்மித்த பிரதேசங்களில் வசித்து வரும் மக்களையும் அச்சுறுத்தி வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



பீதியின் காரணமாக மக்கள் மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி பாதுகாப்பை தேடி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கும் சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் காட்டுயானைக் கூட்டம் வீடுகள், வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

யானைத் தொல்லையை கட்டுப்படுத்த இதுவரை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## காரைதீவு கந்தசுவாமி ஆலயத்தில் களைகட்டும் கந்தசஷ்டி விரதம் !



வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு கந்தசுவாமி ஆலயத்தில் வருடாந்த கந்தசஷ்டி விரதம் நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இன்று (18) சனிக்கிழமை சூரசம்ஹாரம் நடைபெறும். ஆலயத்தில் கந்தசஷ்டி கவசம் பாடுவதையும் பூஜைகள் இடம்பெறுவதையும் படத்தில் காணலாம்.

## கல்முனை சேனைக்குடியிருப்பில் இளைஞனின் சடலம் மீட்பு

(துறைநீலாவணை நிருபர்)

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனைக்குடியிருப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள வர்த்தக கட்டட தங்குமிட அறையிலிருந்து நேற்றுமுன்தினம் காலை இளைஞன் ஒருவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. 22 வயது மதிக்கத்தக்க கோகுலராஜ் சுமன்ராஜ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீரின் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி எஸ். ஜனகீதன் மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஏ.ஆகாஸ் உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த கல்முனை நீதிமன்ற நீதவான் எம். எஸ்.எம் சம்சுதீனின் உத்தரவின் பிரகாரம் சடலம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அம்பாறை தடயவியல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்.

## அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் தரமுயர்த்தப்படும் பொத்துவில் பஸ் டிப்போ

(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப்பின் பெரும் முயற்சியினால் பொத்துவில் உப பஸ் டிப்போவானது பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கான நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப்பின் அழைப்பின் பேரில் பிரதம அதிதிகளாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டு பிரதான பஸ் டிப்போவை திறந்து வைக்கவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யூ. டி. வீரசிங்க, இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் பொறியியலாளர் லலித் டி அல்விஸ், தேசிய அபிவிருத்தி மற்றும் கட்டுமானக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பொறியியலாளர் குசான் தேவிந்தா மற்றும் அரசாங்க அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

பொத்துவில் உப பஸ் டிப்போவானது பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கான தீர்மானம் கடந்த வருடம் அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்டிருந்தது. நாட்டின் பொருளாதார பிரச்சினை காரணமாக பொத்துவில் பஸ் டிப்போ அபிவிருத்திக்கென பணம் ஒதுக்குவதில் பல சிரமங்கள் காணப்பட்டன.

குறித்த காலப்பகுதியில் பொத்துவில் பஸ் டிப்போ அமைந்துள்ள நிலத்தின் சட்டரீதியான உரிமையை மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் மேற்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக பஸ் டிப்போவுக்காக உரிமம் சட்டரீதியாக வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பஸ் டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான முதற்கட்ட நிதியாக சுமார் 60 மில்லியன் ரூபாவை பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப்பின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்பக்கட்ட வேலைகள் ஆரம்பமாகின. பஸ் டிப்போவாக தரமுயர்த்தும் நிகழ்வில் அதிதிகள் கோலாகலமாக அழைத்து வரப்படுவதுடன் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு அதிதிகள் இங்கு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். பொத்துவில் பிரதேசத்திலுள்ள நிறுவனங்கள், பொதுஅமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் அமைப்புகள், பள்ளிவாசல்கள், பொதுமக்கள் என பலரும் ஒன்றிணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை விசேட அம்சமாகும்.

# தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில்...

## திருகோணமலை கல்வி வலயத்தில் 293 மாணவர்கள் சித்தி

(திருகோணமலை தினகரன் நிருபர்)



ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் திருகோணமலை கல்வி வலயத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 2300 மாணவர்களில் 293 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். அத்துடன் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் நவராசா கோவண்ணன் 186 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

## கல்முனை பற்றிமாவில் 67 மாணவர்கள் சித்தி!

(காரைதீவு குறூப் நிருபர்)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் நேற்றுமுன்தினம் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி 67 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கல்லூரி அதிபர் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ்.ஸி தெரிவிக்கையில், எமது பாடசாலையில் 218 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

உமாரூபன் சஷ்வினா என்ற மாணவி 186 என்ற அதிக புள்ளியைப் பெற்றுப் பெற்றுள்ளார்.

## கல்முனை /விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் 10 மாணவர்கள் சித்தி



துறை நீலாவணை நிருபர்

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கல்முனை கல்வி வலயத்திலுள்ள கமு/கமு/விவேகானந்தா தமிழ் வித்தியாலயம் இம்முறை வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. எஸ்.யர்ஷனன்(186), ஏ.விபுஷன்(171), என்.ஹபிஷன்(170), எஸ்.ஷம்ரிஷன்(159), ஆர்.ஜிதேஸ்(155), பி.டாஸ்னி(153), எம்.என்.எப்.சஹாதா(153), ஏ.ஜே. அயிரா(152), வீ.ரேஷாந்த்(152), என்.சஸ்மிதா(150), எஸ்.ரிதிக்யா(147) ஆகியோர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெற்றுள்ளனர். இப்பாடசாலையிலிருந்து 25 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

### 133 வருடங்களின் பின்னர்

## ஈச்சிலம்பற்று தி/மூ/மீனாட்சியம்மன் வித்தியாலயத்தில் இரு மாணவர்கள் சித்தி

தோப்பூர் குறூப் நிருபர்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் படி மூதூர் வலயம் ஈச்சிலம்பற்று வாழைத்தோட்டம் தி/மூ/மீனாட்சியம்மன் வித்தியாலயத்தில் இரண்டு மாணவிகள் சித்தியடைந்துள்ளனர். பாடசாலை ஆரம்பித்து 113 வருடங்களில் முதல்முறையாக இவ்வருடம் இரண்டு மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர். அ.விதுஸ்கா 150, ஜெ.டக்சனா 149 என்ற அடிப்படையில் புள்ளிகளையும் பெற்றுள்ளனர். பாடசாலை ஆரம்பித்து 113 வருடங்களில் முதல் முறையாக இவ்வருடம் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





## 162 புள்ளிகளைப் பெற்று சித்தி

தி/கிண்ணியா அல் இர்பான் கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி கற்கும் முகம்மது றணத் 2023 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலையில் அதிகூடிய புள்ளியான 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் அஸ்வர் சபானா ஆகியோரின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(படம்:கந்தளாய் தினகரன் நிருபர்)



(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இம்முறை வெளிவந்த புலமைப்பரிசில் பெறுபேறுகளின்படி டாக்டர் முகம்மது அனஸ், ஆசிரியை சினிஸ் தம்பதிகளின் புதல்வி பர்ஹத் பாத்திமா 190 புள்ளிகளைப் பெற்று அக்கரைப்பற்று வலயத்திலும் கல்முனை மாவட்டத்திலும் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.



கல்முனை அஸ் ஸுஹறா வித்தியாலயத்தில் முதல் தடவையாக 09 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர். இதுவரை காலமும் இப்பாடசாலையில் 4 மாணவர்கள் மட்டுமே சித்தி பெற்று வந்தனர்.

## நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் மாபெரும் சிரமதான நிகழ்வு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் செயற்பாடுகள் மக்களுக்கு பூரண திருப்தியளிக்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய பசுமைப் புரட்சி வேலைத் திட்டத்தின் கீழ் நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழக உறுப்பினர்களின் பங்குபற்றலோடு நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் மாபெரும் சிரமதான நிகழ்வு அண்மையில் (13) இடம்பெற்றது.



நிந்தவூர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். பி.ஏ.வாஜித் தலைமையில் நடைபெற்ற சிரமதான நிகழ்வில் தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர்களான பி.எம்.நசிருடீன், எம்.சி.எஸ். சமாஹிலா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ. எம்.நியாஸ், வைத்தியசாலையின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் ஐ. எல். எம். றபீக் உட்பட வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சிவில் பாதுகாப்புக் குழுக்கள் சீரமைப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள சிவில் பாதுகாப்பு குழுக்களை சீரமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹனவின் வழிகாட்டலிலும் ஆலோசனையிலும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை சீரமைக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை சீரமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

புதிய காத்தான்குடி 167 சி கிராம உத்தியோகத்தர் பிரிவில் சிவில் சமூக பாதுகாப்புக்குழுவை சீரமைக்கும் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

கிராம உத்தியோகத்தர் திருமதி சம்ஹாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி நிஜாமுதீன், காத்தான்குடி பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு அதிகாரி ஏ.எல். எம்.ஜவாஹிர், பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இர்பான் உட்பட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வெள்ளத்தில் மூழ்கிய புதுக்குடியிருப்பு நகரம்




(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடும் மழை காரணமாக வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் 8 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு (16) பெய்த கடும் மழை காரணமாக புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி உள்ளிட்ட மக்களின் குடியிருப்பு பகுதிகள், வணிக நிலையங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

புதுக்குடியிருப்பு நகர் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் பலவற்றுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளதுடன் பாடசாலையொன்றுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்தமையால் அப்பாடசாலை நேற்று இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது.

புதுக்குடியிருப்பு கிழக்கு, மேற்கு, ஆனந்தபுரம், கோம்பாவில் போன்ற கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் முதன்மை வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் கிராமங்களிலுள்ள வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நகர் பகுதியிலுள்ள பாடசாலையான ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை வளாகத்துக்குள் மழை வெள்ளம் புகுந்துள்ளதால் மாணவர்கள் கல்வி கற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் வீடு திரும்பியுள்ளனர்.

ஆனந்தபுரம் கிராமத்தில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு அவர்களது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாகவும் வேணாவில் பகுதியில் சிறிய குளம் நிரம்பி வழிந்தோடுவதால் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பாதிக்கப்பட்டு அவர்களது உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

பிரதேச சபையினர் கனரக இயந்திரங்களைக் கொண்டு நகரில் காணப்படும் வடிகால்களை சீர் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட வணிக நிலையங்கள் தொடர்பான விவரங்களை கிராம சேவகர் ஊடாக திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

## வடக்கின் உதயம்

# தானாக உடைப்பெடுத்த நந்திக்கடல் முகத்துவாரம்



(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக நந்திக்கடலுக்கான நீர்வரத்து அதிகமாக காணப்படுகின்றது. அதனைதொடர்ந்து வட்டுவாகல் ஊடான நந்திக்கடல் முகத்துவாரம் தானாக உடைப்பெடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட முறிப்பு குளம் வான் பாய்கின்ற நிலையில் முத்தையன் கட்டு குளத்தின் கீழான பேராற்று நீரும் நந்திக்கடலை சென்றடைந்துகொண்டிருக்கின்றது.

அதிகளவான மழைவீழ்ச்சியால் நந்திக்கடலுக்கான மழைவெள்ள நீர்வரத்து அதிகரித்ததை தொடர்ந்து வட்டுவாகல் பாலம் நிரப்பி முகத்துவாரம் நேற்றுமுன்தினம் இரவு தானாக உடைப்பெடுத்து முல்லைத்தீவு பெருங்கடலுடன் இணைந்துள்ளது.

கடந்த காலங்களில் நந்திக்கடல் நிரம்பிய நிலை காணப்பட்டால் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடாக வட்டுவாகல் மீன்பிடி சங்கங்களின் ஆலோசனை மற்றும் கமக்கார அமைப்பினருடன் கூட்டம் நடத்தியே முகத்துவாரம் வெட்டுவதற்கான திகதி அறிவிக்கப்பட்டு பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவது வழமை.

# இருளில் மூழ்கும் பூநகரி சங்குப்பிட்டிப் பாலம்

சாவகச்சேரி விசேட நிருபர்



பூநகரியில் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்தில் சில மாதங்களாக இரவு வேளையில் மின்விளக்குகள் ஒளிராமையால் பாலம் இருளில் மூழ்கிக் காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நூற்றுக்கணக்கான சூரியப்படல் மின்கலங்களினூடாக தன்னியக்கமாகவே இரவு வேளையில் ஒளிரக்கூடிய மின்விளக்குகள் பொருத்தப்பட்டு அழகுற காணப்பட்ட பூநகரி சங்குப்பிட்டிப் பாலம் சில மாதங்களாக கவனிப்பாரற்ற நிலையில் ஒளியிழந்து இருளில் மூழ்கியுள்ளது.

பாலம் மாலை வேளைகளில் அழகுற இருந்தபோது உள்ளூர், வெளியூர் சுற்றுலா பயணிகள் அதிகமாக சஞ்சரித்து வந்தனர்.

தற்போது அவர்களின் வரவும் குறைந்துள்ளதோடு பாலமும் துருப்பிடித்தும், காபட் கழன்று பழுதடைந்தும் காணப்படுகின்றது. அத்துடன் பூநகரியிலிருந்து தனங்கிளப்பு வரையான ஏ 32 வீதியும் சேதமடைந்து விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலையில் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.





வடமாகாண அரசாங்க பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் சேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு அதிபர் சேவை தரம் 111 க்கு இணைத்துக் கொள்ளப்பட்ட புதிய அதிபர்களுக்கான ஒரு மாதகால பயிற்சிப்பட்டறை கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை துணுக்காய் கல்வித் திணைக்களத்திலுள்ள பயிற்சி மண்டபத்தில் ஆரம்பமானது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# யாழ். ஒஸ்மானியா கல்லூரியில் ஐந்து மாணவர்கள் சித்தி



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.ஒஸ்மானியா கல்லூரியைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

எம்.ஆர்.ஆதிலா அக்ஸா 164, ஆர்.ஸஹீம் 160, பி.ஏ. அம்றா _ 156, எம்.ஐ. பாத்திமா இஸ்மா 149, எம்.ஆர். அப்துல் முஹ்ஸி 148 என

யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில் ஐந்து மாணவர்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது இதுவே முதல் தடவையாகும் என கல்லூரி அதிபர் என்.எம். ஷாபி தெரிவித்தார்.

**தகவல்: யாழ். பரீட் இக்பால்**

# 4 வயது மகளை சித்திரவதை புரிந்த தந்தைக்கு இரண்டு வருட சிறை

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பகுதியில் தனது 4 வயது மகளை அடித்து துன்புறுத்திய நபருக்கு 2 வருட சிறைத்தண்டனை விதித்து ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்துறை கரம்பொன் பகுதியைச் சேர்ந்த வாய் பேசாத முடியாத பெண்ணை சுருவிலை சேர்ந்த நபரொருவர் திருமணம் செய்துள்ளார்.

அவர்களுக்கு 04 வயதில் மகள் ஒருவர் இருந்துள்ளார். கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளையடுத்து மனைவி கணவனை விட்டு பிரிந்து சென்றுள்ளார். இந்நிலையில் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முற்பகுதியில் மனைவி விட்டு சென்ற நிலையில் தன்னுடன் இருந்த மகளை மிக மோசமாக சித்திரவதை புரிந்து, அடித்து துன்புறுத்தி அதனை காணொளியாக சமூக வலைத்தளங்களில் சிறுமியின் தந்தை பகிர்ந்துள்ளார்.

ஊர்காவற்துறை நீதவானின் கவனத்திற்கு காணொளி சென்றதையடுத்து, ஊர்காவற்துறை பொலிஸாரை அதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து சிறுமியை தாக்கிய நபரை கைது செய்ய நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அதனையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சிறுமியை தாக்கிய நபரை கைது செய்ததுடன், சிறுமியையும் மீட்டு இருந்தனர். மீட்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்கு பின்னர், சிறுவர் நன்னடத்தை பிரிவின் ஊடாக சிறுவர் காப்பகத்தில் சேர்க்கப்பட்டதுடன், சிறுமியின் தந்தை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளையடுத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை தீர்ப்புக்காக திகதியிடப்பட்டிருந்தது. இதில் சிறுமியை தாக்கிய தந்தையை குற்றவாளியாக தீர்ப்பளித்து அவருக்கு இரண்டு வருடகால சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதேவேளை பாதிக்கப்பட்ட சிறுமி சிறுவர் காப்பக பராமரிப்பில் வளர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பருத்தித்துறை விசேட நிருபர்)



யாழ்ப்பாணம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய 38 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இதன்போது 10 கிலோ 875 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்ததுடன் சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புட்டு புரைக்கேறியதால் இளைஞன் உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்)

புட்டு சாப்பிடும் போது புரைக்கேறியதால் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியை சேர்ந்த இராசரத்தினம் சுமணன் (வயது 21) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இளைஞன் வீட்டில் புட்டு சாப்பிட்ட போது, அது புரைக்கேறியுள்ளது. அதனைதொடர்ந்து தனக்கு நெஞ்சு அடைப்பதாக கூறிய போது, வீட்டார் சுடுநீர் குடிக்க கொடுத்துள்ளனர். சில நிமிடங்களில் இளைஞன் மயங்கி விழுந்ததை அடுத்து, இளைஞனை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது, இளைஞன் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

அதனைதொடர்ந்து நடைபெற்ற பிரேத பரிசோதனையில், சுவாச குழாய்க்குள் உணவு மாதிரிகள் காணப்பட்டதை அடுத்து, சுவாச குழாய்க்குள் உணவு பதார்த்தம் அடைத்து கொண்டமையால் மரணம் சம்பவித்ததாக கூறப்பட்டுள்ளது.

# ஹாட்லி கல்லூரி மாணவர்களின் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(நாகர்கோவில் விசேட நிருபர்)



ஹாட்லி கல்லூரி மாணவர்களின் 24 ஆம் ஆண்டு நினைவு தினம் பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்கரையில் நேற்று வெள்ளிக்கிழமை (17) அனுஷ்டிக்கப்பட்டது.

இன்பர்சிட்டி கடற்கரை பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி கல்வி செயற்பாட்டுக்காக, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடலலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களான பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன், பாலகிருஸ்ணன் பிரதீபன் ஆகியோரின் 24 ஆம் ஆண்டு நினைவுதினமும், பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்ற பொழுதில் 17/05/2004 அன்று இடம்பெற்ற புகையிரத விபத்தில் உயிரிழந்த மரியரட்ணம் குணரட்ணம் ஆகியோரின் நினைவு தினமும் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் ஹாட்லி கல்லூரி அதிபர் த. கலைச்செல்வன், மாணவர்களது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

## மலைச்சாரல்

# நோர்வூட் காசல் ரீ நீர்த்தேக்க பகுதியில் கடல் கழுகு மீட்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

நோர்வூட் காசல் ரீ நீர்த்தேக்க பகுதியில் புதிய ரக கழுகொன்று காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு நுவரெலியா வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் காசல் ரீ நீர்த்தேக்க பகுதியிலுள்ள சுற்றுலா விடுதியில் பணிபுரியும் ஊழியர் ஒருவரே கடல் கழுகை பிடித்து ஒப்படைத்துள்ளதாக தெரியவருகின்றது.

நோர்வூட் காசல் ரீ நீர்த்தேக்கத்தை சுற்றி வாழும் கடல் கழுகுகள் மீது காகங்கள் தாக்கியதால், கடல் கழுகுக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் பறக்க முடியாமல், காசல் ரீ நீர்த்தேக்கத்தில் இருந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

காயங்களுக்குள்ளான கடல் கழுகு ஹற்றன் பொலிஸாரின் உதவியுடன் நுவரெலியா வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் ஹற்றன் பொலிஸ் நிலையத்துக்கு வந்து காயமடைந்த கடல் கழுகை பொறுப்பேற்று, ரந்தெனிகல கால்நடை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

## தரம் 5 புலமைப்பரிசில்

# பதுளை விஹார மஹாதேவி கல்லூரி மாணவி 198 புள்ளிகள் பெற்று சாதனை

(நுவரெலியா தினகரன் நிருபர்)



பதுளை விஹார மஹாதேவி மகளிர் கல்லூரி மாணவி துலிதி சந்தினி விஸ்சுந்தர இவ்வருடம் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று உயர் திறமையை வெளிப்படுத்தியுள்ளார். மாணவி துலிதி பாடசாலை கல்வியில் மட்டுமின்றி இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் தனது திறமையை வெளிப்படுத்தியவர் என கல்லூரி அதிபர் திருமதி சரோஜனி பெரேரா தெரிவித்தார்.

மாணவி துலிதி சந்தினி, அவரது ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவரும் அவரது கல்வி நடவடிக்கைகளுக்கு உதவியதாக தெரிவித்தார்.

# ஹப்புத்தளையில் ரயில் என்ஜின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்து விபத்து

(ஹாலிஎல விசேட நிருபர்)



தியத்தலாவ ஹப்புத்தளை ரயில் பாதையில் நேற்று காலை அஞ்சல் ரயில் என்ஜின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் ரயில் சக்கரங்கள் இயங்குவதில் தடை ஏற்பட்டதுடன் பலமணிநேரம் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது. பதுளை நோக்கி பயணித்த ரயிலே இவ்வாறு அனர்த்தத்துக்கு முகம்கொடுத்துள்ளது. வீதியை புனரமைப்பது முன்னுரிமையளிக்கும் பணி என்பதால் தியத்தலாவ இராணுவ முகாமினர் மற்றும் பொலிஸார் இணைந்து வீதியை புனரமைக்கும் பணிகளை ஆரம்பித்திருந்தனர்.

# National Industry Excellence Awards 2023 இல் தங்க விருதைப் பெற்று பிரகாசித்த சந்தனாலேப

இலங்கையின் முன்னணி ஆயுர்வேத அழகுசாதன வர்த்தக நாமமான சந்தனாலேப, பெருமைக்குரிய 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில்துறை விசேடத்துவ விருது வழங்கல் (*National Industry Excellence Awards 2023*) விழாவில் மீண்டுமொருமுறை கௌரவிக்கப்பட்டுள்ளது.

தொழில்துறையில் சிறந்து விளங்கும் இவ்வர்த்தகநாமம், அழகுப் பராமரிப்பு தொடர்பான அழகுசாதனப் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்துறைப் பிரிவில், மதிப்பிற்குரிய தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய கைத்தொழில் விசேடத்துவ விருது வழங்கும் விழாவானது, பல்வேறு துறைகளில் உள்ள உள்ளூர் தொழில்முனைவோருக்கு அங்கீகாரம் வழங்கும் பெருமைக்குரிய நிகழ்வாகும். தேசிய கைத்தொழில்துறை விசேடத்துவ விருதுகளில் கடந்த காலங்களில் பல முறை விருது பெற்றதன் மூலம் சந்தனாலேபவின் தொடர்ச்சியான வெற்றியானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி, தற்போது வழங்கப்பட்டுள்ள தங்க விருதானது, இவ்வணிகத்தில் சிறந்து விளங்குதல் மற்றும் புத்தாக்கம் தொடர்பில் இவ்வர்த்தகநாமம் கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது.



இது தொடர்பில், *Sanjeewaka Ayurvedic Products Pvt Ltd* தலைவரும் அதன் முகாமைத்துவ பணிப்பாளருமான ரஞ்சித் பிரேமதிலக தெரிவிக்கையில், "மிகவும் மதிப்புமிக்க இந்த மேடையில் மீண்டும் எமக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளமையானது, உண்மையில் ஒரு பெரும் மரியாதையாகும். இந்தச் சாதனையானது எமக்கு சிறப்புக்கு உரியது எனக் குறிப்பிடுவதற்கு காரணம், சிறந்து விளங்குவதற்கு நாம் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பு ஆகும். இலங்கையின் ஆயுர்வேத அழகுசாதனத் துறையில் சந்தனாலேப முன்னோடியாக விளங்குகின்றது. அத்துடன் கடந்த 30 வருடங்களாக, அதே உயர் தரத்தை கடைப்பிடித்து இன்றுவரை சந்தையில் முன்னணியில் இருந்து வருகிறோம். நாம் பெற்ற இந்த விருதானது எமக்கு ஊக்கமளிப்பதோடு, இதற்காக எமது வாடிக்கையாளர்களுக்கும் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம்.'' என்றார்.

## தினகரன் வர்த்தக உலா

# விசேட டேட்டா ரோமிங் திட்டங்களை வழங்கும் HUTCH

இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான *HUTCH*, அதன் குறிப்பிடும்படியான *Data Roaming* திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது.

இது விசேடமாக *HUTCH* இன் உலகளாவிய ரோமிங் சேவை விரிவுபடுத்தலில் ஒரு முக்கிய இடமான இந்தியாவிற்கு பயணிக்கும் நபர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னோடியான திட்டங்கள் மூலம், வாடிக்கையாளர்கள் தங்களது பயணத்தின் போது மிகவும் கட்டுப்படியான *Data Roaming* வசதியை பெறுகின்றனர்.

இது வழக்கமான ரோமிங்கின் போது அனுபவிக்கும் கட்டணப் பட்டியல் அதிர்ச்சிகளில் இருந்து விடுதலை அளிக்கிறது.

அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணம் செய்பவர்கள், யாத்திரிகர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் பயண வசதி வழங்குனர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவு பயணிகளுக்கும், தங்களது பயணத்தின் போது கட்டுப்படியான விலையிலான மற்றும் மன அமைதியான இணைய இணைப்பு வசதியை, *HUTCH Roaming* மூலம் அனுபவிக்க முடியும்.

# பெண் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டும் DFCC ஆலோக நிதியியல் அறிவு அமர்வுகள்

நிதியியல் அறிவு என்பது இலங்கையில் பெண் தொழில் முயற்சியாளர்கள் முகங்கொடுக்கும் பாரிய சவாலாக காணப்படுகின்றது. முற்றிலும் பெண்களுக்கான நிதியியல் தீர்வான *DFCC* ஆலோக, இதனை இனங்கண்டு, நிதி உதவி மற்றும் பெறுமதிமிக்க நிதி அல்லாத நன்மைகளை வழங்கி, பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான தனது ஆதரவை நீட்டித்துள்ளது.

இந்த வகையான முயற்சிகள் மத்தியில் நாடெங்கிலும் அறிவுப் பகிர்வு அமர்வுகள் மூலமாக விழிப்புணர்வைப் பரப்பி வருகின்ற *DFCC* ஆலோக நிதியியல் அறிவு அமர்வுகளின் நிகழ்வுகள் அண்மையில் மட்டக்களப்பிலும், பதுளையிலும் இடம்பெற்றுள்ளன.

இத்தகைய முயற்சிகளினூடாக, உத்வேகமளிக்கும் பெண்களின் தொழில் முயற்சிகளை தேசத்தின் பொருளாதாரத்திற்குப் பங்களிக்கும் வெற்றிச் சரித்திரங்களாக மாற்றுவதற்கான இலவச வணிக ஆலோசனை உதவி மற்றும் அறிவுப் பகிர்வை *DFCC* வங்கி அவர்களுக்கு வழங்கி வருகின்றது.




முன்னுரிமை வட்டி வீதங்கள், சலுகைக் கட்டணங்கள் மற்றும் தரகுப்பணங்களை பிரத்தியேகமாக பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு வழங்கி, வங்கித்துறையில் அவர்களது ஈடுபாட்டை ஊக்குவித்து, அனுசரணையளிப்பதில் *DFCC* ஆலோக தனித்துவம் மிக்கது. இலங்கையில் பெண்களுக்கு சொந்தமான வணிகங்கள் மற்றும் பெண்கள் மத்தியில் கணிசமான பங்கினர் வங்கிச்சேவைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களாகவோ அல்லது வங்கிச்சேவை மிகவும் குறைவான மட்டத்தில் கிடைக்கப்பெறுகின்றவர்களாகவோ காணப்படும் நிலைமை, இத்தகைய முயற்சிகளுக்கான முக்கியமான தேவையை எடுத்தியம்புகின்றது.

# சர்வதேச சிறுவர்கள் தினத்தை மகிழ்ச்சியுடன் மற்றும் படைப்பாற்றலுடன் கொண்டாடிய Sunshine Holdings PLC

*Sunshine Holdings PLC* அண்மையில் *Battaramulla*வில் உள்ள *Ape Gama* வளாகத்தில் சர்வதேச சிறுவர்கள் தினத்தை கொண்டாடியது. இந்த நிகழ்வு 16 வயதுக்குட்பட்ட *SUN* ஊழியர்களின் குழந்தைகளுக்கு ஒரு அன்பான சந்தோஷம் தந்த தருணமாக இருந்தது, அவர்கள் நாள் முழுவதும் வேடிக்கை, படைப்பாற்றல் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

*Sunshine Holdings PLC* குழந்தைகளின் திறன் மற்றும் வாக்குறுதியின் மீது வலுவான நம்பிக்கை கொண்டுள்ளது, அவர்களை ஒரு ஆசீர்வாதமாகவும் பிரகாசமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையாகவும் கருதுகிறது.

சர்வதேச சிறுவர்கள் தின கொண்டாட்டம் இந்த உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாக இருந்தது, பெற்றோர்களுடன் சேர்ந்து குழந்தைகள் உற்சாகம் மற்றும் மகிழ்ச்சியால் நிரப்பப்பட்ட நாளில் பங்கேற்க கூடினர். இந்த நிகழ்வு பல்வேறு வகையான



நடவடிக்கைகளை உள்ளடக்கியிருந்ததுடன், ஒவ்வொரு குழந்தையும் விரும்பும் ஏதாவது ஒன்றைக் கண்டறியும் வகையில் உறுதி செய்தது.

# WCIC பெண் தொழில் முயற்சியாளர் விருதுகள் 2023 ஆரம்பமானது

இலங்கையிலும், சார்க் பிராந்தியத்திலும் மிகச் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களை அங்கீகரித்து, வெகுமதியளிக்கும் வகையில், 2023 ஆம் ஆண்டிற்கான "*WCIC Prathibhabhisheka*" என்ற தனது முதன்மை நிகழ்வை கைத்தொழில் மற்றும் வர்த்தக மகளிர் சம்மேளனம் (*The Women's Chamber of Industry and Commerce*) ஆரம்பித்துள்ளது.

*WCIC* இன் தலைவர் அனோஜி டி சில்வா கருத்து வெளியிடுகையில் "பெண் தொழில் முயற்சியாளர்கள் விருது 2023 நிகழ்வானது, 2024 பெப்ரவரியில் இடம்பெறவுள்ளது. பெருமதிப்பிற்குரிய *WCIC Prathibhabhisheka* பெண் தொழில் முயற்சியாளர் விருதுகள் 2023 நிகழ்வில் போட்டியிடுவதற்காக கடந்த சில ஆண்டுகளில் தமது நெகிழ்திறன் மற்றும் சாதனைகளைப் பகிர்ந்து, தைரியத்துடன் சவால்களை எதிர்கொண்ட மிகச்சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விருதுகள், பெண் தொழில் முயற்சியாளர்களின் பரிமாணம், வளர்ச்சிக்கான திடசங்கல்பம் மற்றும் பொருளாதார பங்களிப்புக்காகவும் கௌரவிக்கப்படும் வகையில் வழங்கப்படுகின்றது.




இப்போட்டியானது பிரதானமாக, இலங்கையில் தொழில் முயற்சியாளருக்கான போட்டியாக இருக்கும் அதேவேளையில், சார்க் பிராந்தியத்தில் உள்ள பெண்களுக்கான விசேட பிரிவில் போட்டியிடுவதற்கான வாய்ப்பையும் நாங்கள் உள்ளடக்கியுள்ளோம்," என குறிப்பிட்டார்.

ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் இணைத் தலைவர்களான நிலானி செனவிரட்ண மற்றும் கயானி டி அல்விஸ் ஆகியோர் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கையில், "தொடக்க வணிக முயற்சி (*StartUp*), நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரிய பிரிவுகளின் கீழ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. மீளாய்வுக்குட்படும் 2022/23 ஆண்டில் ஒவ்வொரு பிரிவும் குறிப்பிட்ட வருமானத்தை கொண்டிருக்கும். ஒவ்வொரு பிரிவின் கீழும் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல விருதுகள் வழங்கப்படும்," என்று குறிப்பிட்டனர்.

# இலங்கை பத்திரிகை சம்மேளனத்தின் வருடாந்த மாநாட்டுக்கு அனுசரணை வழங்கியது அமானா வங்கி

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் 68ஆவது வருடாந்த மாநாடு நவம்பர் 1 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வை முன்னெடுப்பதற்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துக்கு அமானா வங்கி அனுசரணை வழங்கியிருந்தது.

இந்நிகழ்வில் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் இலங்கைக்கான இந்தோனேசியா உயர் ஸ்தானிகர் தேவி குஸ்டினா டோபிங் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், கல்விமான்கள் மற்றும் கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஊடகத்துறையில் நீண்ட காலமாக சேவையாற்றி தேசத்தின் முன்னேற்றத்துக்கு பங்காற்றியிருந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு கௌரவிப்புகளும் வழங்கப்பட்டிருந்தன. இவர்களுக்கு டி.எஃவ். காரியகரவன ஞாபகார்த்த ஊடக தங்க விருது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்த அனுசரணை தொடர்பில் அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், "மக்களின் குரலை பிரதிபலிக்கும் ஊடகத்துறை, தகவலறியும் சமூகத்தை கொண்டிருப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது. மக்களுக்கு நட்பான பெறுமதிகளைக் கொண்டுள்ள அமானா வங்கி, இலங்கை பத்திரிகை சம்மேளனத்தின் 68ஆவது வருடாந்த மாநாட்டை முன்னெடுப்பதற்கு கைகோர்த்திருந்ததையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், தேசத்துக்கு உயர் சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களை கௌரவிப்பதில் பங்கேற்றிருந்ததையிட்டும் மகிழ்ச்சியடைகின்றது." என்றார்.

# 'Life to Our Beaches' திட்டத்தில் இணைந்துள்ள கொமர்ஷல் வங்கி

களுத்துறை கடற்கரையின் ஒரு பகுதியை பராமரிக்கும் பொறுப்பை கொமர்ஷல் வங்கி ஏற்றுள்ளது. கழிவுகள் மாசடைதல் எதுவும் இன்றி இந்தப் பகுதியை தூய்மையாகப் பராமரிக்கும் பொறுப்பை இலங்கை உயிர்பன்முக நிறுவனத்துடன் இணைந்து *Biodiversity Sri Lanka (BSL)*. கொமர்ஷல் வங்கி ஏற்றுள்ளது.

*BSL* இன் *'Life to Our Beaches'* திட்டத்தின் ஒரு கூட்டாண்மை பங்காளியாக இணைந்துள்ள, இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி ஒரு கரையோர பராமரிப்பு குடும்பத்தால் கரையோரத்தை சுத்தம் செய்து பராமரிப்பதற்கு தேவையான நிதியை வழங்கும். களுத்துறை தெற்கு ரயில்வே நிலையத்துக்கு எதிராக உள்ள களுத்துறை பீச் பார்க் பிரதேசத்தின் 500 மீட்டர் பரப்பளவு இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

எமது கடற்கரைகளுக்கு வாழ்வு என்ற இந்தத் திட்டம் கரையோர சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை *Marine Environment Protection Authority (MEPA)* சமுர்தி அபிவிருத்தி திணைக்களம் *(DoSD)*, இலங்கை உயிர்பன்முக நிறுவனம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களை ஒருங்கிணைத்து அமுல் செய்யப்படும் ஒரு திட்டமாகும். கடற்கரைகளை சுத்தம் செய்வது, சேகரிக்கப்படும் கழிவுகளை முறையாக அகற்றுவது அதன் மூலம் தேசிய உயிர்பன்முக இலக்குகளை அடைந்து கொள்ள பங்களிப்புச் செய்வது மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பன இதன் இலக்காகும்.



ஒவ்வொரு பிரதேசங்களில் இருந்தும் சமுர்த்தி பயனாளிகள் மத்தியில் இருந்து இதற்கென தெரிவு செய்யப்படும் கரையோர பராமரிப்பு குடும்பத்துக்கு உரிய மாதாந்த கொடுப்பனவு, தேவையான உபகரணங்கள் மற்றும் பொருள்கள் கரையோர பராமரிப்பை மேற்பார்வை செய்தல் என்பனவற்றை கொமர்ஷல் வங்கி மேற்கொள்ளும்.

# 10ஆவது முறையாக கிறிஸ்துமஸ் கேக் கலவையை தயாரிக்கும் நவலோக மருத்துவமனை குழுமம்

இலங்கையின் முன்னணி தனியார் சுகாதார சேவை வழங்குனரான நவலோக மருத்துவமனை குழுமம், அதன் 10வது வருடாந்த கிறிஸ்துமஸ் கேக் கலவை நிகழ்வை அண்மையில் *Caf Seventy Seven* இல் நடத்தியது.



நவலோக மருத்துவமனை குழுமத்தின் தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாச உட்பட வைத்தியசாலை நிர்வாகம், ஊழியர்கள் மற்றும் விசேட அதிதிகள் இந்த பாரம்பரிய கிறிஸ்மஸ் கேக் கலவையை தயாரிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய நவலோக குழுமத்தின் தலைவர் தர்மதாச, கடந்த சில வருடங்களாக சவால்களை எதிர்கொண்ட போதிலும், நவலோக மருத்துவமனை குழுமம் மீள்தன்மை மற்றும் சிறந்து விளங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக வலியுறுத்தினார்.

நோயாளி பராமரிப்பு மற்றும் மருத்துவ கண்டுபிடிப்புகளை மேம்படுத்தும் வகையில் இலங்கை சமூகத்திற்கு உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவதில் மருத்துவமனை கவனம் செலுத்துகிறது என்றும் அவர் வலியுறுத்தினார்.

## 4ஆவது முறை சம்பியனானது ஏறாவூர் யங் அல் ஹீரோஸ்



**ஏறாவூர் சுழற்சி நிருபர**

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடாத்தப்படும் பிரிவு 2 போட்டியின் இறுதிப் ஆட்டத்தில் ஏறாவூர் யங் அல் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் கிழக்கு மாகாண சம்பியனாக வெற்றியீட்டியது.

அண்மையில் அம்பாறை உகன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ஏறாவூர் யங் அல் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் அம்பாறை கிமுதுராவ ஈகிள் கழகத்துடன் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அம்பாறை கிமுதுராவ ஈகிள் அணியினர் 39.2 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 127 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் பதிலுக்கு துடுப்பாடிய ஏறாவூர் யங் அல் ஹீரோஸ் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தனர்.

இப்போட்டியின் போது பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் சிறப்பாக செயற்பட்ட முகம்மட் பாசில் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

தொடர்ச்சியாக நான்காவது முறையாக மாகாண சம்பியனாக ஏறாவூர் யங் அல் ஹீரோஸ் விளையாட்டுக் கழகம் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தப்பது.

## இலங்கை கிரிக்கெட் தடை: ஐ.சி.சி கூட்டத்தில் பேச்சு




அஹமதாபாத்தில் இன்று (18) ஆரம்பமாகும் சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் இந்த ஆண்டின் கடைசி சபைக் கூட்டத்தில், இலங்கை கிரிக்கெட் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை குறித்து பிரதானமாக விவாதிக்கப்படவுள்ளது.

இன்று ஆரம்பமாகும் ஆண்டு இறுதியின் காலாண்டு கூட்டம், மற்றும் பல்வேறு குழுநிலைக் கூட்டங்களின் பின் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை (21) ஐ.சி.சி. சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அஹமதாபத்தில் நாளை நடைபெறவுள்ள இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு இரண்டு நாட்களில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் முக்கிய விடயங்கள் குறித்தும் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. குறிப்பாக 2024–27 சுழற்சிக்கான வருவாய் பகிர்வு மற்றும் 2028 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம்பெற்றிருப்பது குறித்து முடிவுகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் இடம்பெற்ற ஐ.சி.சி சபைக் கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட்டை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் எதிர்வரும் கூட்டத்தில் அது பற்றி விவாதிக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டியை இலங்கையில் நடத்தப்படவுள்ள நிலையில் தடைக்கு மத்தியில் அதனை தக்க வைப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று தெரியவருகிறது.

இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு தொடர்பில் ஐ.சி.சி பிரதித் தலைவர் இம்ரான் க்வாஜா செல்வாக்குமிக்க குரலாக இருப்பார் என்று நம்பப்படுகிறது. மே மாதம் இலங்கைக்கான உண்மையை கண்டறியும் குழுவின் போது அவர் இந்த விடயத்தை ஆராய்ந்திருந்தார்.

உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி இரண்டு போட்டிகளில் மாத்திரமே வென்று எஞ்சிய ஏழு போட்டிகளில் தோல்வியை சந்தித்திருந்தது. இந்நிலையில் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க இலங்கை கிரிக்கெட் சபையை கலைத்து முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இடைக்கால சபை ஒன்றை நியமித்திருந்தார்.

எனினும் அந்த இடைக்கால சபைக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்ததோடு இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை பதவி விலகக் கோரும் தீர்மானம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் பயிற்சியாளராக மொஹமட் ஹபீஸ் நியமனம்



அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான தொடரில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக முன்னாள் வீரர் மொஹமட் ஹபீஸ் செயற்படவுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பணிப்பாளராக மொஹமட் ஹபீஸ் அண்மையில் நியமிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் பணிப்பாளர் மற்றும் தலைமை பயிற்றுவிப்பாளர் என்ற இரண்டு பதவிகளை கிரிக்கெட் சபை ஒரு பதவியின் கீழ் கட்டமைத்துள்ளது.

அதன்படி பணிப்பாளராக நியமிக்கப்பட்ட மொஹமட் ஹபீஸ் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான தொடர்களில் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மொஹமட் ஹபீஸ் தலைமை பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், அணியின் தலைவராக செயற்பட்டு வந்த பாபர் அசாம் ஏற்கனவே தலைவர் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

பாபர் அசாம் தலைவர் பதவியிலிருந்து விலகியதுடன் சான் மசூட் டெஸ்ட் போட்டிகளுக்கான தலைவராகவும், சஹீன் ஷா அப்ரிடி டி20 போட்டிகளுக்கான தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவுக்கு சென்று 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளதுடன், நியூசிலாந்து அணிக்கு எதிராக 5 டி20 போட்டிகளில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# காசாவை அடுத்து மேற்குக் கரையிலும் பல மருத்துவமனைகள் சுற்றிவளைப்பு

### தெற்கு காசா மக்களுக்கும் வெளியேற இஸ்ரேல் உத்தரவு



காசா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்தும் வான் தாக்குதல்களை நடத்தி வருவதோடு அந்தப் பகுதியின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனையில் இஸ்ரேலிய துருப்புகள் ஒவ்வொரு கட்டடமாக தீவிர சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன. அந்த மருத்துவ வளாகத்தில் பொது மக்கள் சிக்கித் தவிக்கும் நிலையில் காசாவில் நேற்று மீண்டும் ஒருமுறை தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் அல் ஷிபா மருத்துவமனையை முடக்கியுள்ள சூழலில் அங்கு போதிய நீர் மற்றும் உணவு இல்லாமல் 7,000க்கும் அதிகமான மக்கள், நோயாளர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் உயிராபத்திற்கு முகம்கொடுத்திருப்பதாக காசா மருத்துவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

காசா ஊடக அலுவலகம் டெலிகிராமில் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், அல் ஷிபா மருத்துவமனையில் உணவு, நீர் மற்றும் சிசுக்களுக்கான பால் இல்லாது மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

“மின்சாரம் துண்டிக்கப்படுவதால், மருத்துவமனையில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள பல குழந்தைகளை இழக்க நேரிடலாம், அவர்களுக்கு அடைகாப்புக் கருவியும் இல்லாமல் போகும்” என்று அதில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை அந்த மருத்துவமனைக்கு ஊடுருவிய இஸ்ரேலிய துருப்புகள் அங்கு சோதனைச்சாவடிகளை அமைத்து பாதுகாப்பை பலப்படுத்தி இருப்பதோடு தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு காசாவில் தரைவழி நடவடிக்கையை முன்னெடுத்து வரும் இஸ்ரேலின் துருப்புகளில் பிரதான இலக்காக இந்த மருத்துவமனை மாறியுள்ளது.

இந்த மருத்துவமனையில் ஹமாஸ் கட்டளைத்தளம் இயங்கி வந்ததாக இஸ்ரேல் குற்றம்சாட்டும் நிலையில் ஹமாஸ் அமைப்பு அதனை மறுத்துள்ளது.

மருத்துவமனையிலிருந்து ஹமாஸ் பயன்படுத்தியதாகக் கூறப்படும் துப்பாக்கிகள், மடிக்கணினி உள்ளிட்ட பொருட்களை பறிமுதல் செய்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தாலும், அவை ஜோடிக்கப்பட்ட ஆதாரங்கள் என்று ஹமாஸ் அமைப்பு கூறுகிறது.

மருத்துவமனைகளில் கொடூரத் தாக்குதல் நடத்தும் தங்களது போர்க் குற்றத்தை நியாயப்படுத்துவதற்காக அல்–ஷிபா மருத்துமனையிலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்படுவதாக இஸ்ரேல் கூறி வருவதாக ஹமாஸ் அமைப்பு கூறியது.

போலியான ஆதாரங்களை நிறுவி வருவதால்தான் மருத்துவமனைக்குள் இருப்பதாகக் கூறப்படும் ஆயுதங்கள் மற்றும் பிற பொருட்கள் குறித்த தகவலை வெளியிட இஸ்ரேல் இராணுவம் பல மணி நேரம் எடுத்துக்கொண்டிருக்கலாம் என்று சமூக ஊடகங்களில் சிலர் சந்தேகம் எழுப்பினர்.



இந்த நிலையில், அல்–ஷிபா மருத்துவமனைக்குக் கீழே அமைக்கப்பட்டுள்ள சுரங்கக் கட்டமைப்புகள் உள்ளிட்ட ஆதாரங்களைக் கண்டறிய பல வாரங்கள் ஆகும் என்று இஸ்ரேல் இராணுவம் தற்போது கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை பலஸ்தீன போராளிகளால் கடத்தப்பட்ட தமது படையைச் சேர்ந்த வீராங்கனை ஒருவரின் உடலை காசாவில் வைத்து கண்டுபிடித்ததாக இஸ்ரேல் இராணுவம் நேற்று தெரிவித்தது. 19 வயதான நோவா மர்சியானோவின் உடல் வடக்கு காசாவில் அல் ஷிபா மருத்துவமனைக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த நாற்பது நாட்களுக்கு மேல் நீடித்துவரும் காசா மீதான இஸ்ரேலின் வான் தாக்குதல்களும் எந்தத் தணிவும் இன்றி நீடித்து வருகிறது. இதில் பல இடங்களையும் இலக்கு வைத்து நேற்று வான் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. தெற்கு காசாவின் ரபா பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களில் கணிசமானோர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் உள்ள பல குடியிருப்புக் கட்டடங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 18 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜபலியா அகதி முகாமின் பலுஜா பகுதியில் இடம்பெற்ற பிறிதொரு தொதாக்குதலில் மேலும் மூவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. காசா நகர் மீது இஸ்ரேலிய படை சரமாரி செல் குண்டு தாக்குதல்களையும் நடத்தியுள்ளது.



இதேவேளை தெற்கு காசாவிலுள்ள 4 நகரங்களிலிருந்து பொது மக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் வியாழக்கிழமை (16) உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பான பகுதியாக இஸ்ரேலால் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த அந்த நகரங்களிலிருந்து பொது மக்கள் வெளியேற்றப்படுவது, இதுவரை காசாவின் வடக்குப் பகுதியில் நடைபெற்று வரும் கடுமையான சண்டை தெற்குப் பகுதிக்கும் பரவும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

காசாவின் தெற்குப் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் துண்டுப் பிரசுரங்களை விமானம் மூலம் வியாழக்கிழமை வீசியது.

அந்தப் பிரசுரங்களில், கான் யூனிஸ் நகருக்கு கிழக்கு எல்லையில் அமைந்துள்ள பனி ஷ{ஹைலா, கூஸா, அபாஸன், அல்–கராரா ஆகிய நான்கு நகரங்களில் இருப்பவர்கள் அங்கிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்த நகரங்களில் ஹமாஸ் அமைப்பினர் அல்லது அவர்களது நிலைகளுக்கு அருகே வசிப்பவர்கள், இஸ்ரேல் தாக்குதலில் உயிரிழக்கும் அபாயத்தில் உள்ளதாக அந்த துண்டுப் பிரசுரங்களில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, ஹமாஸ் அமைப்பினருக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, வடக்கு காஸா பகுதியிலிருந்து தெற்குப் பகுதி நகரங்களுக்குத் தப்பிச் செல்லுமாறும், அந்தப் பகுதிகள் பாதுகாப்பானவை என்றும் இஸ்ரேல் அறிவித்திருந்தது.

அதைப் போலவே வடக்குப் பகுதிகளில் கடுமையான குண்டுவீச்சு நடத்திய இஸ்ரேல் இராணுவம், தெற்கு காசாவில் குறிப்பிட்ட அளவிலேயே தாக்குதல் நடத்தி வந்தது.

தற்போது காசா நகர், அந்த நகரில் ஹமாஸின் தலைமையகம் அமைந்துள்ளதாக இஸ்ரேல் கூறிய அல்–ஷிபா மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளுக்கு இஸ்ரேல் இராணுவம் முன்னேறிவிட்டது.

மேலும், வடக்கு காசாவில் அமைந்துள்ள ஹமாஸ் அமைப்பினரின் பாராளுமன்ற வளாகம், பொலிஸ் தலைமையகம் உள்ளிட்ட முக்கிய அலுவலகங்களை இஸ்ரேல் இராணுவம் கைப்பற்றியது.

இந்தச் சூழலில், தெற்கு காசாவில் உள்ள 4 நகரங்களிலிருந்து பொதுமக்கள் வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் தற்போது உத்தரவிட்டுள்ளதன் மூலம், போரை மேலும் விரிவுபடுத்தி காசாவின் தெற்குப் பகுதிகளையும் இஸ்ரேல் இராணுவம் கைப்பற்றும் என்ற அச்சத்தை அந்தப் பகுதி மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

ஆக்கிரமிப்பு காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் கடந்த 2005ஆம் ஆண்டு வெளியேறியது. அதன் பின் அந்தப் பகுதியில் ஹமாஸ் அமைப்பு ஆட்சியை கைப்பற்றியதை அடுத்து காசாவை முற்றுகையில் வைத்திருந்த இஸ்ரேல் அங்கு பல முறை போர் தொடுத்திருந்தது.

இதேவேளை அக்கிமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பல மருத்துவமனைகளை சுற்றிவளைத்த இஸ்ரேலிய இராணுவம் பாரிய தேடுதல் வேட்டையை நடத்தியுள்ளது. கடந்த வியாழக்கிழமை இரவு தொடக்கம் நேற்று வரை இந்த சுற்றிவளைப்புகள் இடம்பெற்றுள்ளன.

இபின் சினா மருத்துவமனையில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு நடவடிக்கை பல மணி நேரம் நீடித்ததாக அங்கிருப்பவர்கள் விபரித்துள்ளனர். ஜெனின் அகதி முகாமில் இடம்பெற்ற அளில்லா விமானத் தாக்குதல்களில் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். காசாவில் போர் நீடிக்கும் நிலையில் மேற்குக் கரையிலும் இஸ்ரேலின் வான் தாக்குதல்களும் வழக்கமாகியுள்ளது.

ஹெப்ரோன் நகரில் இஸ்ரேலிய படையினரால் மேலும் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றவர்களே சுட்டுக் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இதன்மூலம் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 200ஐ நெருங்கியுள்ளது.

காசாவில் உயிரிழப்பு 11,600ஐ தாண்டியிருப்பதோடு இதில் 40 வீதத்திற்கும் அதிகமானவர்கள் சிறுவர்களாவர்.

பொதுமக்களின் உயிரிழப்பை தவிர்க்கும் இஸ்ரேலின் முயற்சி வெற்றி அளிக்கவில்லை என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒப்புக்கொண்டுள்ளார். அமெரிக்காவின் சி.பி.எஸ் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியிலேயே நெதன்யாகு இதனைத் தெரிவித்துள்ளார்.

“எந்த ஒரு பொதுமகனின் உயிரிழப்பும் கவலைக்குரியது. நாம் ஒன்றும் செய்யவில்லை, ஏனென்றால் பொதுமக்களை தீங்கு விளைவிக்கும் வழியில் இருந்து வெளியேற்ற நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம், அதே நேரத்தில் ஹமாஸ் அவர்களை தீங்கு விளைவிக்கும் வழியில் வைத்திருக்க எல்லாவற்றையும் செய்கிறது” என்று நெதன்யாகு கூறினார்.